திராவிடநாடு

6—5—62 வார வெளியீடு

மே நாள்

—[நக்கீரன்]—

ஓடெடுத்தார் உழைத்தவர்கள் நெஞ்சு நோக
உலுத்தர்கள் கொழுத்திட்டார் உரிமை பேசி
விடிவிழந்தார் உழைத்தோர்கள், சொந்தக் காரர்
வட்டிலென மதித்திட்டார் விளக்க மென்று
கோடிதொகை குவிக்கின்ற கொடிய நெஞ்சின்
குருட்டு விழிப் பார்வையினைத் திறந்து விட்டு
கூடித்தொழி லாளர்தமை யொன்று சேர்த்து
குறைதீர்க்க வைத்திட்ட மேநாள் வாழ்க!

தொழிலாலே முன்னேற்றம் உலகில் ஆனல்
தொழிலாளர் முன்னேற்ற மடைந்தா ரில்லை,
மெழுகுநிலை ஒளியிழந்த பின்னர் இந்த
பேதினியில் தொழிலாளர் வாழ்வு இன்று
பழகுதமிழ் அழகுநிலை ஒழிந்தாற் போல
பரிதாப நிலைதானே உழைத்தோர்க் கெல்லாம்
அழுகிவந்த அவர்வாழ்வைத் திருத்தி விட்ட
அன்புத்தாய் அன்னவர்க்கு மேயோர் தாயே!

புளிதோற்ற கூழ்தன்னைக் குடித்து விட்டு
புழுதியினில் புல்மெத்தை மீது தங்கி
குளிக்கின்ற நீர்தன்னைக் குடலி லூற்றி
குடும்பங்கள் நடத்திட்ட தொழிலா ளர்தம்,
குளமான கண்ணீரில் இன்ப வெள்ளம்
குதித்தோடிப் புனலாட வந்த நாளும்
களிப்பென்னும் கடல்மூழ்க நீதி சொன்ன
கருவானில் வெண்ணிலவு மேநா ளாகும்!

ஜமிலா

அல்ஜீரிய நாட்டு விடுதலைக் காதை யின் ஒரு கட்டத்தை இப்படி உலகுக் குச் சொல்பவர் ஜிசிலி ஆலிமி என் னும் வக்கீல் அம்மையார். இந்த அம்மையாருக்கு, 'சொந்த நாட்டில் பிறர்க்கடிமை செய்து துஞ்சிடோம்! இனி அஞ்சிடோம்' என்று வீர முரசு கொட்டுவோரைப் பார்த்து எள்ளத் தெரியாது. இகழத் தெரியாது. என் கையில் துப்பாக்கி கொடுக்கப்பட்டால் இந்த நாட்டில் 'விடுதலை வேண்டும், உரிமை வாழ்வு வேண்டும் என்று கூறுகின்ற விடுதலை வீரர்கோட்டத் துத் தலைவரைச் சுட்டு வீழ்த்துவேன் என்று அகம்பாவம் பேசத் தெரியாது.

எல்லாவற்றிற்கும் மேலாக, மாற் ருனை உறவென்று எண்ணி, அவன் உண்டுவிட்டு வைக்கும் எச்சத்தை எடுத்து நக்குவதே பெரு வாழ்வு, பெருமிதமான வாழ்வு என்று எண்ணுவதையே பேரிழுக்காகக் கருதும் நற்பண்பு வாய்ந்தவர் இந்த அம்மையார்.

"நான் வெட்கத்தால் குன்றிப் போனேன், ஜமிலாவின் கதையைக் கேட்டபோது" என் கிறார் ஜமிலாவைப்பற்றி விவரிக்கும் பிரெஞ்சு நாட்டு வழக்குரை மாது ஜிசிலி ஆலிமி.

"அதோ பாருங்கள், அவள் தான் ஜமிலா. அவள் கண்களில் பிரெஞ்சு நாட்டு மானக்கேடு, — வெட்கம் வரையப்பட்டுள்ளது" என்று கூறு கின்றது படம்போட்டுக் காட்டி ஜமிலாவின் கதையைக் கூறவந்த இங்கிலாந்து நாட்டு ஏடு.

"உங்கள் உள்ளம் இளகிய உள்ளமா? அப்படியானல் இந்தக் கதையை நீங்கள் படிக்காதீர்கள். இதைப்போன்ற எழுத்தால் எழுத முடியாத மாபெரும் கொடுமைகள், வாயால் சொல்ல முடியாத அநியாய அட்டூழியங்கள் உலகத்தின் ஒரு பாங்கில் நடப்பதை எந்த ஆற்றலா லும் தடுத்து நிறுத்த முடியாது என்று எண்ணுகின்றவர்கள் தயவு செய்து இந்தப் பக்கத்தையும், இதை அடுத்து வரும் பக்கங்களை யும் புரட்டித் தள்ளிவிட்டு வேறு செய்தியை நாடுங்கள்.

"ஏனென்றால். இந்தப் பக்கங் களில், நாகரிகத்தின் தலைமக்கள் நாங்கள் என்று ஒரு காலத்தில் பீடு நடைபோட்டுப் பெருமிதமாக உலா வந்த பிரெஞ்சுப் படையைச் சேர்ந்த இன்றைய வீரர்கள் வெறியர்களாக மாறி அல்ஜீரிய வீராங்கனை ஒருத்தி யிடம், நாட்டுப்பற்று நிறைந்த நங்கை ஒருத்தியிடம் நடந்து கொண்ட விலங்கு முறையினை, காட்டியவன் கண்மையினைப் படிக் கப் போகின்றீர்கள் நீங்கள்.

"இந்த ஜமிலா பூபசாவுக்காக ஜிசிலி ஆலிமி என்னும் வழக்குரை மாது வழக்குமன்றமேறி எளிதில் வாதாட முடிந்தது என்கிறீர்களா? பிரெஞ்சு இராணுவத்தின் வேண்டு கோளுக்கு அடிபணிந்த பிரெஞ்சு அரசு அந்த வழக்குரை மாதின்

கனகு

வழியிலே பலபல தடைக் கற்களைத் தூக்கிப் போட்டது. பல பல ஊறு களை அவள்பால் விளைத்தது. அவ் வளவையும் பொறுத்துக்கொண்டு தான் அந்த வக்கீல் அம்மையார் இந்த வீராங்கனையின் சார்பில் பிரெஞ்சு ஏகாதிபத்தியத்தை எதிர்த்து நின்று வாதாடினுள்.

"இந்தக் கதை உலகம் தெரிந்து கொள்ள வேண்டிய கதை. பிரெஞ்சு நாட்டின் துணிவுமிக்க ஆடவரும், பெண்டிரும் இந்தக் கதையை ஒரு வருக்கொருவர் பரிமாறிக்கொண்ட போது, பெரும்பாலும் தங்கள் தலையை விலையாகக் கொடுக்கச் சித்தமாகிக் கொண்டுதான் பரி மாறிக்கொண்டனர். நாமும் இதை அதே மனவலியோடு உலகுக்குக் கூறுவோம்!" இந்த முன்னுரை யுடன் ஜமிலாவின் கதையை வெளி யிட வந்த அந்த நிகழ்ச்சியை விவரிக்கின்றது.

நாமும்,

விடுதலைக்குக்கொடுக்கவேண்டிய விலை எவ்வளவு பெரிய நிலையிறந்த விலை என்பதை இதன் மூலம் தெரிந்துகொள்வோம். உரிமை உணர்வுகொண்டோர் தங்கள் நாடு மீட்கும் செயல்வழி சந்திக்கவேண் டிய கட்டங்களைக் கணக்கிட்டுக் கொள்வதற்கு இந்த நிகழ்ச்சிகளில் வரும் சண்டாளர்களின் வெய்ய கொடுமை பயன்படட்டும்!

•

ஜமிலா!

அல்ஜீரிய நாட்டுப் பெண்குலத் தின் திலகமாக உலவிவந்தாள். அது அவள் செய்த முதற் குற்றம்.

அல்ஜீரிய மண்ணில் அந்நிய ஆதிக்கம்—பிரெஞ்சு ஏகாதிபத்தியம் இருக்கக்கூடாது என்று எண்ணி

(13-ம் பக்கம் பார்க்க)

உழைப்பாளியின் நாள்

மலர் 20 | ஆண்டு சந்தா ரூ. 8 (6—5—62) தனிப்பிரதி 16 காசு [இதழ் 36

கடந்த மேதினத்துக்கும் இந்த மேதினத்துக்கும் இடையிலே, எந்த ஆற்றல் வெற்றிபெற்று வருகிறது என்பதை நோக்கிடின், மனம் பூரிக்கவே செய்யும், அடித்தால் அடங்கிவிடும்—பூட்டினால் பதுங்கிவிடும்—மிரட்டினால் சாய்ந்துவிடும்—என்று, ஆதிக்கக்காரர்கள் விடுதலை விரும்பிகளைத் துச்சமாக மதிப்பது வாடிக்கை! இந்தக் கட்டம் மாறி, வளரும் உழைப்பாளிகளின் படையினைக்கண்டு, அச்சம் கொள்வோராக மாறி வருகின்றனர் ஆதிக்கபுரியினர்!! அந்த அச்சத்தின் காரணமாக, என்ன இனிப்புத் தரலாம், எரிமலையை மறைக்க எந்த மூடியைப்போடலாம், எப்படி முயன்றால் பாட்டாளிகளின் மனதை அடங்கவைக்கலாம் என்கிற சாகசப் பாதையினையும் மேற்கொள்ள ஆரம்பித்து வருகின்றனர். நாட்டுக்கு நன்மை என்கிற பொது நலத்தைக் காட்டி, அதற்காகவே தாங்கள் பாடுபடுவதாகச் சொல்கிறார்கள்–நாடாளும் காங்கிரசும் அதுவே தனது வழி எனச் சொல்லிக் கொப்பளங்கள் வெடிக்காமல் என்னென்ன மருந்துகளைத் தடவலாம் என்று யோசிக்கிறது.

கவனிக்கக்கூடாதது! அலட்சியப்படுத்தப்பட வேண்டியது!—என்று கருதிய காலம்போய் இவைகளை எப்படிச் சமாளிப்பது, என்னென்ன சாகசங்களைக் கையாண்டு வெடிக்கும் கொப்பளங்களை அடங்கச்செய்வது, என்கிற முயற்சிக்கு ஆள்வோரும் அவர்களை ஆட்டிப்படைக்கும் ஆதிக்கக்காரர்களும் வரத் தலைப்பட்டிருக்கிறார்கள். சென்ற சில ஆண்டுகளாக ஏற்பட்டிருக்கும் இந்த மனமாறுதல், கடந்த ஆண்டிலும் அதிகரித்தே உள்ளது! குறையவில்லை!!

உரிமையா? உனக்கா!! — என்று அதட்டிக்கேட்ட காலம் போய், உரிமைதானே! உனக்குத்தானே!! என்று சஞ்சலத்துடன் கூறும் கட்டத்தை இப்போது, பல இடங்களில் காண்கிறோம். ஆள்வோரும், ஆதிக்கக்காரர்களும், முரட்டுத்தனத்தை விட்டு, புதுவழி மூலம், விடுதலைக் குரலை மடக்க இனியும் முடியாது என்ற அவசியத்துக்கு வந்துள்ளனர். அதனால், புரையோடும் புண்ணுக்குப் புனுகுபூசும், முறைகாண முயற்சிக்கின்றனர்.

காங்கிரஸ் பேசிடும் சோஷியலிசமும், கனதனவான்கள் கூறிடும் 'ஒத்துப்போதல்' முறையும் இதுதான். இந்த வழி, புண்ணை ஆற்றாது என்பதையும், சமுக அமைப்பைத் தலைகீழாக மாற்றியமைத்தால் தான் "சக்திக்கேற்ற உழைப்பும்; உழைப்புக்கேற்ற ஊதியமும்" என்கிற இலட்சியம் வெற்றிபெறும் என்பதனையும் பாட்டாளிகள், நன்றாக உணர்ந்திருக்கிறார்கள். அந்த உணர்வு, கடந்த ஓராண்டில், உலகெங்கும் அதிகமாகி வருகிறதே ஒழியக்—குறையவில்லை.

நாட்டை நாடு அடிமைப்படுத்துவதையும்—மனிதனை மனிதன் வஞ்சித்து வாழ நினைப்பதையும்—தீமையானது, வேண்டாதது, ஒழித்துக் கட்ட வேண்டியது என்கிற 'உண்மை' ஒவ்வோர் இதயத்தினுள்ளும் பற்றிக்கொண்டு வருவது, உலக முன்னேற்றத்தின் காட்சிகளில் ஒன்றாகும். தீ பற்றுகிறது! — என்பதைக் கூறும் ஆதிக்கபுரியினர், பழைய திமிர்ப்பாதையைவிட்டுப் பாசமும், நேசமும் காட்டி 'சரண்டும்' பாதையை நாடும் நிலைமைக்கு வந்துகொண்டிருப்பதும், தொழிலாளர் உலகுக்கு ஒரு வெற்றியேயாகும். எனினும் நிரந்தர வெற்றி காண — புதுயுகம் பூத்திட — செய்யவேண்டிய வேலைகள், ஏராளம் இருக்கின்றன!

அவைகளைச் செவ்வனே செய்து, தாழ்ந்த திராவிடத்தின் விலங்குகளை உடைத்து, தன் உடல்களிலே பூட்டப்பட்டிருக்கும் ஆதிக்கச் சங்கிலிகளையும் தூள் தூளாக்கிப், பாடுபடும் நாம் 'முழுப்பலன்' பெறும் உன்னதபுரி நோக்கி விரையவேண்டிய உறுதியை ஒவ்வொரு பாட்டாளியும் இந்தப் புனிதநாளாம் மே நாளில் மனதில் ஏற்றுக்கொள்ள வேண்டும்.

திராவிடநாடு, எனும் அந்த உன்னத புரியில், சமதர்மம் மணக்கும்! மனிதனாக எல்லாரும் வாழலாம்! சாதி சமயக் கழுகுகள் இருக்காது! சாந்தமும் அமைதியும் நிலவும்! பிறகு, உலகப் பாட்டாளிகளுடன் ஒன்றுகூடி மகிழலாம்! அந்நாள் வர, இந்தத் தியாக நாளினை, ஒவ்வொரு தோழரும் பயன்படுத்தவும், பலருக்குச் சொல்லவும் வேண்டுமென விரும்புகிறோம். வெல்க உழைப்பு! வெல்க உரிமைக்குரல்!!

விடுதலைக்கு ஓர் கடுங்கோன்

ப. கண்ணன்

சென்ற இதழ் தொடர்ச்சி...

காட்சி - 9

இடம்:- மதுரை அரண்மனை.

காலம்:- பிற்பகல்.

[கட்டுண்டிருக்கிறாள் பூபாலி. எட்டாத தொலைவில் உணவு, பழங்கள் வைக்கப்பட்டுள்ளன. ஆத்திரத்தோடு நிற்கிறான் மன்னன்.]

கண்ட:- காளிங்கனை மணக்கச் சம்மதிக்காத வரையில் உன்னை விடப்போவதில்லை. கண்ணால் காணும் உணவை வாயால் சுவைக்கமுடியாமல், இப்படியே பட்டினிகிடந்து சாகப்போகிறாய்.

பூபாலி:- வெறுக்கப்படுவோனுக்கு வாழ்க்கைப்படுவதைக்காட்டினும் சாவுக்கு இரையாவது மேல்! தந்தையே! அது எனக்குமட்டுமல்லாமல்; தங்கள் கீர்த்திக்கும் புகழ் சேர்ப்பது! சாகவிடுங்கள்; சாகவிடுங்கள் என்னை!

கண்ட:- முடியாது! கண்டகதேவன் மகள் தந்தையின் விருப்பத்தைப் புறக்கணித்தாள் என்ற பெயர் வந்தபிறகு; பெறுகின்ற மரணத்தின் மதிப்பு உயரவேண்டும்! கொடுமையான சித்திரவதையால் அணு அணுவாகச் சாகவேண்டும் நான்!

[அப்போது காளிங்கன் வந்து நிற்கிறான்.]

காளி:- வேந்தே!

கண்ட:- விளம்புக!

காளி:- பிரதம தளவாய்ப்பதவி கொடுத்தீர்கள்; சேந்தன்வழுதிக்கு! அதன் பயங்கரமான பலனை அனுபவிக்கப்போகிறோம் நாம்!

கண்ட:- காளிங்கா! என்ன கூறுகிறாய் நீ?

காளி:- களப்பிரர் பிடியிலிருந்து பாண்டிய நாட்டை விடுதலை செய்வதற்குப் படை திரட்டப்படுகின்றது, பிரதமதளவாய்வீட்டிலேயே!

கண்ட:- (வியந்து) ஆ!......எனது ஆட்சியை ஒழிக்கச் சூழ்ச்சியா? நம்பமுடியவில்லையே என்னால்!

காளி:- நமது ஒற்றன் படைஞன் போல் சென்று பார்த்து வந்த உண்மையிது. சேந்தன் வழுதியின் மனைவி ஐயனடியாளும், சிவமாறன் என்போனும் புரட்சிப் படை திரட்டுவதில் முனைந்து நிற்கின்றனர். சிறையிலே கிடக்கும் கடுங்கோனையும், இந்த நாட்டையும் விடுவிப்பது குறிக்கோளாம்! படையிலே பத்தாயிரம்பேர் சேர்துவிட்டார்களாம்!

கண்ட:- மிகப் பெரியசதி! முளையிலேயே கிள்ளவேண்டும் இந்தப் பயங்கர முயற்சியை! வதைக்கவேண்டும் உரிமைகேட்கும் வெறியர்களை!

காளி:- விரைவில் ஐயனடியாள் மதுரைக்கு வரப்போவதாகத் தெரிகிறது!

கண்ட:- மிக்க நன்று. காளிங்கா! விடக்கூடாது நம்மை எதிர்க்கும் வீணர்களை. எச்சரிக்கையாக இருக்கவேண்டும். வா; இதுபற்றி நாம் தனியே சற்றுப் பேசுவோம்.

[விரைந்து செல்கின்றனர் இருவரும்.]

பூபாலி:- வைகை!

வை:- ஏனம்மா?

பூபாலி:- காரியம் மிஞ்சிவிட்டது! இவ்வளவுக்குப் பிறகும் சிறைச்சாலையில் வாழவைக்க மாட்டார்கள் கடுங்கோனை. காப்பாற்ற நான் வழிசெய்யவேண்டும். வைகை! எனக்காக ஒரு உதவி செய்வாயா?

வை:- என்னம்மா செய்யணும்?

பூபாலி:- என் காதலரைச் சிறைமீட்க என்தந்தையின் முத்திரைக் கணையாழிவேண்டும். எடுத்து வந்து கொடுக்கவேண்டும்; செல்வதற்கு என் கட்டவிழ்த்துவிடவேண்டும்!

வை:- (பதறி) ஐயயோ! என்னம்மா இவ்வளவு பெரியகாரியத்தை, என்னைச் செய்யச்சொல்றீங்க?

பூபாலி:- காரியம் பெரிதுதான். எனினும், உன்னால் எளிதாகச் செய்யமுடியும், வைகை!

வை:- அப்பனுக்கும், மகளுக்கும் மத்தியிலே, எப்படிப்பட்ட தீம்பு விளையுமோ தெரியலையே! அம்மா! பெத்த தகப்பனைவிடக் காதலிச்சவனையா பெரிசா மதிக்கிறீங்க?

பூபாலி:- பெற்ற தந்தை, ஆதிக்க வெறிகொண்ட அநீதியின் வடிவம்! உற்ற காதலர், அன்பு நெறி கண்டு ஆளவிரும்பும் நீதிமான்! வைகை! பந்தபாசங்களைக் கடந்துவிட்டது நைந்துவிட்ட என துள்ளம், அநீதி அழிக்கப்படவேண்டும்; நீதிகாக்கப் பாடுபடவேண்டும். அதற்காக எதனையும் செய்யச் சித்தமாகிவிட்டேன்! உன்னால், எனது விருப்பத்தை நிறைவேற்ற முடியுமா? முடியாதா?

வை:- இதோ, அம்மா. இப்பவே செய்யறேன்.

[போகிறாள் வைகை]

○

காட்சி - 10

இடம்: மதுரை அரசவை.

காலம்: முற்பகல்.

[மன்னன் கண்டகதேவன், தளவாய் காளிங்கன், மற்றும் பலர் வீற்றிருக்க, கைதியாக நிறுத்தப்பட்டிருக்கிருள் ஐயனடியாள்.]

கண்ட:- தமிழ்ச் சிறுக்கி! எனது ஆட்சியைக் கவிழ்க்கப் புரட்சிப் படை திரட்டுகின்ருயோ? இந்நாடும், மொழியும் நமக்குச் சொந்தம் என்று ஏதுமறியாக் குடிமக்களுக்கு இனவெறியும், மொழி வெறியும் ஊட்டி என்ன செய்து விட முடியும் உங்களால்?

காளி:- வேந்தே! எளிதாகக் கருதாதீர்கள், இந்தப் பெண் பேயை! மிகப் பொல்லாதவள்! புரட்சிப் படை திரட்டியது மட்டுமன்று, செய்தகுற்றம். இவள் மதுரையில் கால்வைத்த நாளிலே சிறையிலிருந்த கடுங்கோனும், பூபாலியும் தப்பி வெளியேறியுள்ளனர்.

கண்ட:- விடுவித்தது இவள் தானே?

காளி:- ஆம் மன்னவ! இவள் மந்திரம் கற்ற மாயப்பெண்., மாற்றுருவில் அரண்மனையில் புகுந்து முத்திரைக் கணையாழி கவர்ந்து சென்று, அவர்களை விடுதலை செய்திருக்கிருள். இந்த மானங்கெட்டவளுக்கு மரண தண்டனை விதிக்கவேண்டும்!

கண்ட:- மடைச்சிறுக்கி! மாபெருங் குற்றங்களைப் புரிந்துவிட்டு மௌனம் சாதித்துவிட்டால், விட்டு விடுவேனென்று கருதுகின்ருயா?

ஐயன:- மன்னு! குற்றம் புரியவில்லை நான்; மன்னிப்புக்கோரி மண்டியிடவுமில்லை! எங்கள் தியாகமும், மொழி மரபும் அழிந்திடாமல் காப்பது எங்கள் கடமை! அழிப்பவர்களை, வேதனை விளைப்பவர்களை வெறுக்கின்ருேம். மனித குலத்தின் பொதுப்பண்பாகிய இவற்றைக் குற்றமாக்கிய நீர், தகுதியற்ற பாலிமொழியும், தரமற்ற சமயாசாரங்களும் வளர்த்திட எங்கள் நாட்டின் செல்வத்தையும் செங்கோலையும் பயன்படுத்துகிறீரே; அது எத்தகைய பெருங்குற்றம்? எத்தகு தண்டனையளிக்க வேண்டும் உமக்கு?

கண்ட:- வேந்தனடி நான்; வேந்தன்! பாண்டி மண்டலத்தைக் கட்டிக் காக்கும் களப்பிரர்குடிப் பிறந்தவன்; எனது முன்னேர்கள் வழியைப் பின்பற்றியே நாட்டைப் பரிபாலித்து வருகிறேன்! எனது கடமையினின்றும் நான் தவற மாட்டேன்; என்னை எதிர்ப்போரை வாழவிடவும் மாட்டேன்!

ஐயன:- மானமொன்றேபெரிதெனக் கொண்டு வாழ்ந்த மறக்குடிப் பிறந்த நாங்கள், நாட்டின் ஈனநிலை மாற்றிட இன்னுயிரளிக்கவும் சித்தமாக இருக்கிருேம்!

கண்ட:- பித்துப் பிடித்தவளே! தமிழ் மரபின் பெருமைகாட்டி என் மகளை மயக்கினன் உன் தம்பி! அந்த வேலையைத் தொடங்காதே என்னிடம்! மயங்கமாட்டேன்!

ஐயன:- என்னை மந்திரம் கற்ற மாயப்பெண்ணென்று வருணிப்பதிலிருந்தே உங்கள் மதிவளம் தெரிகின்றதே! மன்னு! என் தம்பி உமது மகளைக் காதலிப்பதை ஏற்காதவள் நான்! தகாது என்று தடுப்பவள். கணையாழியைக் களவாடி இருவரையும் நான் விடுதலை செய்தேன் என்ற குற்றச்சாட்டு உண்மையன்று! உமது தளவாயின் மண்டையிலே முளைத்த மகத்தான கற்பனை!

காளிங்:- (சினந்து) ஆ! என்னையா அவமதிக்கிருய்? என்ன வாய்க் கொழுப்படி உனக்கு!

[கையிலிருந்த கசையால் அடிக்கிருன். "ஆ" என்று அலறி விழுகிருள், ஐயனடியாள்! அப்பொழுது வருகிருன் சேந்தன் வழுதி. பார்த்துப் பதறுகிருன்.]

சேந்:- வேந்தே! இதுவென்ன கொடுமை! என் மனைவிக்கா இத்தகைய தண்டனை? நாட்டின் பிரதம தளவாயின் மனைவியா, அரசவையிலே இவ்வாறு அலங்கோலமாக்கப்படுகிருள்? இது பொறுக்கமுடியாத வேதனை மன்னு! பொறுக்கமுடியாத வேதனை!

கண்ட:- வேதனை! மனைவியோடு நின்றுவிடுவதன்று சேந்தன் வழுதி! கணவனும் அதன் சுவையைக் காணவேண்டியவனே! வனப்புமிக்க களப்பிரேப்பேரரசைக் காக்கவேண்டிய தளவாய் நீ! அதனைக் கவிழ்த்துவிட்டு அரியாசனம் ஏறிடத் துணிந்துவிட்டான் உன் மைத்துனன்! களப்போருக்குப் படைதிரட்டுகிருள் உன் காதல் மனைவி! வீட்டிலே முளைக்கின்ற எதிர்ப்பை அடக்கவியலாத கோழையால், நாட்டிலே என்ன காரியத்தைச்சாதித்துவிட முடியும்? பிரதம தளவாய்க்குரிய என்ன தகுதி, திறமை, யோக்கியதை இருக்கிறது உனக்கு?

சேந்:- வேந்தே! தங்கள் ஆட்சி வளம்பெற நான் மேற்கொண்ட கடமைகள், ஆற்றிய பணிகள் யாவும் தகுதியற்றுப் போய்விட்டனவா? அத்தனையும் விழலுக்கிறைத்த நீர்தானு? தங்களைப் பகைத்த கடுங்கோனை மைத்துனன் என்றும்பாராமல் காட்டிக் கொடுத்தேனே! இதுதானு அதற்குக் கைம்மாறு?

கண்ட:- இல்லை. இன்னும் இருக்கிறது! என்னை வீழ்த்திடப் படை திரட்டிய உன் மனைவி தூக்குமரம் ஏற்றப்படுவாள்! தகுதியற்ற உனது தளவாய்ப் பதவி இன்ருேடு முடிவு பெறுகின்றது. துரோகத்தை வளரவிட்டமைக்காக நூறு கசையடிகளை இப்போது பெண்டாட்டி முன்பே நீ பெறவேண்டும்; காளிங்கா! என் பிரதம தளவாயே! உன் இரும்புக் கரத்தால் நிறைவேற்று தண்டனையை!

காளி:- ஆஂகா! என் பேறு!

[கசையால் அடிக்கிருன் காளிங்கன். "ஐயோ, நாதா, நாதா" என்று அலறித்துடிக்கிருள் ஐயனடியாள். மயக்கமுற்று விழுகிருன் சேந்தன்வழுதி.]

O

காட்சி - 11

இடம்: பாழ்மண்டபம்

காலம்:- அதிகாலை

[படைவீரர்கள் திரண்டு நிற்கின்றனர். கடுங்கோன், பூபாலி, சிவமாறன் மூவரும் மேடைமீது நிற்கின்றனர்.]

கடுங்:- நண்பர்களே! நாடு, மொழி, காக்கும் நற்பணியில் முனைந்துள்ள வீரர்களே! சேர்த்த வலிமையைக் காட்டுதற்குச் சரியான வேளை வந்துவிட்டது! வடபுலத்துக் களப்பிரர்க்கு அடிமைப்பட்டு நாம் நமக்கென்றிருந்த பழம் பெருமைகளும் பண்புகளும் இழக்

தோம்! இருட்டறையில் குருடர்களாகி இந்நாள்வரை வாழ்ந்துவிட்டோம். நான் விடுதலை பெற்றேன். போதாது! நம்நாடு அந்நிய ஆட்சியினின்றும் விடுதலை பெறவேண்டும்! தமிழகத்தின் அடிமை விலங்குகள் ஒடித்துத் தூள் தூளாக்கப்பட வேண்டும்! அதோ! தோன்றிவிட்டான் எழு ஞாயிறு! உரிமை வேட்கையின் ஒளிக்கதிர்கள் புத்துணர்வு தருகின்றன. புறப்படுவோம் செருமுனைக்கு! நாடாண்ட பரம்பரை நாம். பண்பும், பழைமையும், நீதியும், நெறியும், கடமையும் வீரமும், படைத்த பாண்டியர்கள், நமதுமுன்னோர்கள்! கடல்புரண்டு குமரி நாட்டைக் கொண்ட போதும் கலங்காது வடபுலம் பெயர்ந்து, புதுநிலம் கண்டு ஒரு குடைக்கீழ் உலகாண்டான் நெடியோன் நிலந்தருதிருவிற் பாண்டியன்! கொல்யானை பலவோட்டிக் கூடா மன்னரை வென்றழித்துக் களவேள்வி நடத்தினன் பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதி! கடற்கோளால் அழிந்தவைபோக எஞ்சிய நூல்களைக் கொண்டு வந்து மதுரையிலே தமிழ்ச் சங்கம் நிறுவினன் கடைச்சங்க முதல்வன் பாண்டியன் முடத்திருமாறன்! செந்தமிழாய்ந்து, நாடகத் தமிழ் என்ற பெருநூலியற்றி, மொழிக்கு சிறப்புச் செய்தான் தண்டமிழ்ப் பாண்டியன் மதிவாணன்! குற்றம் புரியாத கோவலனைக்கொன்றமைக்காகக் குமைந்து மடிந்தான் ஆரியப் படை கடந்த நெடுஞ்செழியன்! அத்தகு மடங்காத மாவீரரும், மாண்புடைய நெறியாளரும் அரசோச்சிய மண்ணிலே இன்று நீதி கேட்கும் குடிமகனை வெட்டி வீழ்த்தும் நெறியற்ற நிர்மூடன் ஆட்சி நடத்துகிறான்! காட்டுமிராண்டிக் களப்பிரன் ஆட்சியிலே, தமிழுக்குப் பாதுகாப்பில்லை! தமிழ் மரபு, கலை, சமயம், பண்பாடுகளுக்குப் பாதுகாப்பில்லை! நமது பெண்டு பிள்ளைகளுக்கும் பாதுகாப்பில்லை! இன்னும் எத்தனை காலம் நீடிப்பது இக்கொடுமை? இதோ! புலிக் குகையிலே வளர்ந்த புள்ளிமான்; மன்னன் மகள் பூபாலியை மனம் வெறுத்து நம்மோடு சேர்ந்துவிட்டாள்! தந்தைக்குஎதிராகப்போர்க் கோலம் பூண்டுவிட்டாள்! என்னைச் சிறையினின்றும் விடுதலை செய்த சிங்காரி, கையிலே வாளேந்தி நாட்டின் விடுதலைப் போர்முனைக்கும் வருகிறாள்! நாம் வென்றே தீருவோம்! எத்தகு இழப்பு நேரினும் கவலையுறோம். நமது கொடுந்தடிமைப்பேரிழிவைச் சிந்துகின்ற குருதியில் துடைத்திடுவோம்! பாண்டிய நாட்டைப் பாண்டியரே ஆள வேண்டும் என்ற இலட்சியத்திற்கு உயிர் கொடுத்து உயர்வூட்டுவோம்! வீரர்களே! விரைந்து செல்வோம் மதுரைக்கு! முனைந்து வெல்லுவோம் போரில்! ஓட்டுவோம் அந்நியனை! நாட்டுவோம் நம் அரசை!

பூபாலி:- பாண்டியன் கடுங்கோன் வாழ்க!

எல்லோர்:- வாழ்க! வாழ்க!

பூபாலி:- மாமன்னன் கடுங்கோன் வாழ்க!

எல்லோர்:- வாழ்க! வாழ்க!

[கடுங்கோன் தலைமையில் எல்லோரும் புறப்படுகின்றனர். எதிரே வேகமாக வருகிறான் வீரனொருவன். மடலொன்று தருகிறான். பெற்றுப் படிக்கிறான் கடுங்கோன். முடிக்கிறான்.]

பூபாலி:- மன்னவா! என்ன மடல்?

சிவமா:- மதுரையிலே என்ன புது நிலைமை?

கடுங்:- நண்பன் மெய்வேல் விடுத்துள்ளான். என்னைப் பார்க்க மதுரை சென்ற தமக்கையை, தளவாய் காளிங்கன் கைது செய்தான்; மன்னனுக்கு எதிராகப் படை திரட்டியதாக, என்னையும் பூபாலியையும் விடுவித்ததாகக் குற்றம் சுமத்திச் சபையிலே நிறுத்தினன். விசாரணைக்கூத்து நடத்தினார் மன்னவர். குறுக்கிட்டாராம் என் மைத்துனர். மரண தண்டனை பெற்றாள் தமக்கை. பதவி பறிக்கப்பட்டு நூறு கசையடி பெற்றார் மைத்துனர்! கோட்டைக்கு வெளியே தூக்கியெறியப்பட்டார். காட்டிக்கொடுத்த துரோகத்தின் பரிசைப் பெற்றுவிட்டார்! கொதித்தெழுந்த தமிழர் படைக்கு இப்போது தலைமை யேற்றுள்ளாராம்! நண்பர்களே! நாம் விரைந்து சென்று திருந்திவிட்ட மைத்துனரைச் சந்திப்போம்! தண்டனை பெற்ற தமக்கையை விடுதலைசெய்வோம்! வீழ்த்துவோம் நச்சுப் பகைவனை! உயர்த்துவோம் மீனக்கொடியை! நிறுத்துவோம் பாண்டியராட்சியை!

[போர்முரசு அதிர்கின்றது]

சிவமா:- வெல்க கடுங்கோன்!

எல்லோர்:- வெல்க! வெல்க!

சிவமா:- வாழ்க தமிழ் மரபு!

எல்லோர்:- வாழ்க! வாழ்க!

[போர்முரசம் அதிர்கிறது. ஒலி முழக்கம் செய்த வண்ணம் எல்லோரும் செல்கின்றனர்.]

○

காட்சி - 12

இடம்: மதுரை அரண்மனை.

காலம்: பிற்பகல்.

[முரசு முழக்கமும், எக்காள ஓசையும், மக்களின் கூக்குரலும் கேட்டவண்ணமிருக்கின்றன. அடியுண்ட வேங்கை போல் உலாவுகிறான் மன்னன் கண்டகதேவன். வீரனொருவன் ஓடிவந்து நிற்கிறான்.]

வீரன்-1:- போர்முனைச் செய்தி! கடுங்கோன் படையும், சேந்தன் வழுதிப் படையும் சேர்ந்து இருமுனைகளில் தாக்குகின்றன. என்றாலும் முன்னேறுகிறது நமது படை! வெற்றி நமக்குத்தான்!

வீரன்-2:- (வந்து) போர்முனைச் செய்தி! பகைவர் படைக்குத் தலைமை தாங்குகிறாள் இளவரசி பூபாலி! தூக்குமேடை சென்று, கொலைஞர்களைக்கொன்று, குற்றவாளி ஐயனடியாளை விடுதலை செய்துவிட்டாள்!

வீரன்-3:- (வந்து) கிழக்கு முனையிலே தளவாய் காளிங்கன், சேந்தன் வழுதியால் கொல்லப்பட்டுவிட்டார்! நமது முன்னணிப்படை சிதைந்துவிட்டது!

வீரன்-4:- (வந்து)ஆபத்து! ஆபத்து! நமது எதிர்ப்புச் சக்தி அடியோடு குலைந்துவிட்டது. கொடிக்கம்பம் எரிந்துவிட்டது. கோட்டைக் கதவுகளைப் பிளந்துவிட்டனர், பகைவர்கள்! உள்ளே நுழைந்துவிட்டனர்!

கண்ட:- (மனம் பதறி) ஆ! கொடிக்கம்பம் எரிந்துவிட்டதா? குலைந்துவிட்டதா நமது ஆற்றல்? பிளந்துவிட்டனரா களப்பிரர்கோட்டையின் கதவுகளை? மாவீரன கண்டகதேவன் வாழ்க்கையிலே தோல்வி

(8-ம் பக்கம் பார்க்க)

கனவும் நினைவும்

[வித்துவான் எம். எஸ். இராசா]

அவர் ஒரு கிழவர்! அவள் ஒரு கிழவி!

இருவரும் தம்பதிகள் இல்லை.

திருநெல்வேலியில் ஒரு தெருவில் குடியிருந்தார் அந்தக் கிழவர்; மறு தெருவில் குடியிருந்தாள் அந்தக் கிழவி.

கிழவருக்கு ஒரு மகள் உண்டு; பெயர் வஞ்சி.

கிழவிக்கு ஒரு மகன் உண்டு; பெயர் கண்ணன்.

கிழவர் மகளை வளர்த்தார். வஞ்சி வளர்ந்தாள்; கிழவர் தளர்ந்தார். பருவத்தின் பெருக்கம் வஞ்சியின் உடம்பில் காணப்பட்டது. வயோதிகத்தின் சுருக்கம் கிழவரின் உடம்பில் காணப்பட்டது. இனிமேல் கிழவரைக் காப்பாற்றவேண்டியவள் வஞ்சி. அது அவள் கடமை அல்லவா? காப்பாற்றுவாளா வஞ்சி?

கிழவி மகனை வளர்த்தாள். கண்ணன் நிமிர்ந்து ஓங்கி வளர்ந்தான்; கிழவி கூனிக் குறுகித் தளர்ந்தாள். வாலிபத்தின் வனப்பு கண்ணனின் உடம்பில் காணப்பட்டது. வயோதிகத்தின் வெறிப்புக் கிழவியின் உடம்பில் காணப்பட்டது. இனிமேல் கிழவியைக் காப்பாற்றவேண்டியவன் கண்ணன். அது அவன் கடமை அல்லவா? காப்பாற்றுவானு கண்ணன்?

கண்ணனும் வஞ்சியும் பத்தாம் வகுப்புப் படித்து முடித்து வெற்றி பெற்றிருந்தனர். வெற்றி பெற்ற அவர்கள் வேலைக்காகச் சுற்றித் திரிந்தனர். அங்கு இங்கு என்னுதபடி எங்கும் வேலையில்லாத் திண்டாட்டம்.

கண்ணனிடம் நல்ல ஆண்மைக் குணங்கள் காணப்பட்டன. "பெருமையும் உரனும் ஆடூஉ மேன" என்ருர் தொல்காப்பியர். ஆண்மகனுக்குப் பெருமையும் உரனும் வேண்டும். பழிபாவங்களுக்குஅஞ்சுவதே பெருமை. 'சென்றவிடத்தால் செலவிடாது தீது ஒரீஇ நன்றின்பால் உய்ப்பதே அறிவு.' இவை ஆண்மகனுக்கு இருக்கவேண்டும். கண்ணனிடம் இருந்தன.

வஞ்சியிடமும் நல்ல பெண்மைப் பண்புகள் இருந்தன. "அச்சமும் மடமும் நாணமும் முந்துறுதல் நிச்சமும் பெண்பாற்குரிய" என்ருர் தொல்காப்பியர். பெண்பாற்குரிய அச்சமும் மடமும் நாணமும் வஞ்சியிடம் இயற்கையாகவே அமைந்திருந்தன.

படிப்பும் பண்பும் கண்ணனுக்கும் வஞ்சிக்கும் இருந்தும், இருவருக்கும் வேலை கிடைக்கவில்லையே?

கண்ணன் நாள் தவருமல் தன் தாய்க்குப் பத்திரிகைகளைப்படித்துக் காட்டுவான். கிழவிக்கும் நாட்டு நிலைமைகளைத் தெரிந்துகொள்வதில் நாட்டம் ஏற்பட்டது. ஆனுல், அந்தப் பத்திரிகைச் செய்திகளே — நாட்டு நிலைமைகளே கிழவியின் மனதில் ஒருவித போராட்டத்தை ஏற்படுத்தியிருந்தன. கிழவிக்கு மன அமைதியே இல்லை.

வஞ்சியும் நாள் தவருமல் தன் தந்தைக்குப் பத்திரிகைகளை வாசித்துக் காட்டுவாள். கிழவருக்கும் நாட்டு நிலைமைகளைத் தெரிந்துகொள்வதில் நாட்டம் பிறந்தது. ஆனுல் அந்த நிலைமைகள் கிழவரின் மனதில் ஒருவித போராட்டத்தை ஏற்படுத்தியிருந்தன. கிழவருக்கு அமைதியே இல்லை.

அமைதி இல்லாத வாழ்க்கை என்ன வாழ்க்கை? கிழவியைக் காப்பாற்றக் கண்ணன் இருக்கக், கிழவரைக் காப்பாற்ற வஞ்சி இருக்கக், கிழவிக்கும் கிழவருக்கும் அமைதி இல்லையே!? மனப்போராட்டம்! என்ன மனப்போராட்டம்? ஏன் மனப்போராட்டம்? கண்ணன் கிழவியைக் காப்பாற்றமாட்டானு!? வஞ்சி கிழவரைக் காப்பாற்ற மாட்டாளா!? இருவருக்கும் வேலை கிடைக்காமலா போய்விடும்!?

ஒருநாள் இரவு! நள்ளிரவு!

கண்ணன் கள்ளன் ஆகிவிட்டான்! தன் தாயைக் காப்பாற்றுவதற்கு ஒரு வேலை கிடைக்காததால் வேறு வழியே இல்லாமல் கண்ணன் திருட ஆரம்பித்துவிட்டான். திருடித் தாயைக் காப்பாற்ற முடிவு செய்துவிட்டான். கண்ணன் திருடன்! வறுமை அவனைத் திருடனுக்கிவிட்டது. 'திருநெல்வேலித் திருடன்' என்ற தலைப்பில் கண்ணனைப்பற்றிய திருட்டுச் செய்திகள் பத்திரிகைகளில் காணப்பட்டன. கிழவிக்கு எப்படி இருக்கும்? திருடன் என்ற பட்டத்தைப் பெறவா கண்ணனைப் பெற்ருள்? வளர்த்தாள்? திருடிச் சாப்பிடுவதைவிடப் பட்டினிகிடந்து சாவதையே பெரிதாக மதிக்கும் மானமுள்ள தாய் அல்லவா அந்தக் கிழவி?

வஞ்சியோ விலைமகள் ஆகிவிட்டாள். வறுமை அவளை அப்படி ஆக்கிவிட்டது? வயோதிகத் தந்தையைக் காப்பாற்றுவதற்காக வாலிபத்தை விற்கும் விலைமாது வஞ்சி. பரத்தை வஞ்சி. கிழவருக்கு எப்படி இருக்கும்? மானத்தை விற்று வாழ்வதைவிட மானத்துடன் சாவது மேல் அல்லவா? மானம் இல்லாத வாழ்வா? மானம் உள்ள மரணமா? எது சிறந்தது? உயர்ந்தது? மானத்தை விற்று வாழ்வதைவிட உயிரை இழப்பதைப் பெரிதாக மதிக்கும் மானமுள்ள தந்தை அல்லவா அந்தக் கிழவர்?

கிழவியும் கிழவரும் திடுக்கிட்டு விழித்தனர். எல்லாம் கனவு! கனவில்தான் கண்ணன் கிழவிக்குக் கள்ளனுகக் காட்சியளித்தான்! கனவில்தான் வஞ்சி கிழவருக்கு விலைமாதாகக் காட்சியளித்தாள்! நல்ல வேளை! நனவிலும் கண்ணன் கள்ளனுகிவிட்டால்...? வஞ்சி பரத்தையாகிவிட்டால்...? கிழவியும் கிழவரும் உயிருடன் இருக்கவே மாட்டார்களே?

உண்மையில் கண்ணன் திருடன் ஆகிவிடக்கூடாது என்று விரும்பினுள் தாய்க்கிழவி. தன் மகனைச் சான்ருேன் எனக் கேட்கவேண்டிய தாய் அல்லவா அவள்?

உண்மையில் வஞ்சி விலைமகள் ஆகிவிடக்கூடாது என்று விரும்பினுர் அந்தக் கிழவர். தன் மகளைக் கற்புடையாள் எனக் கேட்கவேண்டிய தந்தை அல்லவா அவர்? கற்பு இல்லாத அழகு வஞ்சிக்கு எதற்கு? கற்பில்லாத அழகு மணம் இல்லாத மலர். மானத்தை விற்று வாழ வேண்டுமா? மானத்தை மதிக்கும் மனிதர் அல்லவா அந்தக் கிழவர்?

கிழவியும் கிழவரும் ஏன் இவ்வாறு கனவு கண்டனர்? ஒரு தாய்

காணவேண்டிய கனவா இது? காணக்கூடிய கனவா இது!? ஒரு தந்தை காணவேண்டிய கனவா இது!? காணக்கூடிய கனவா இது!?

மகன் வளர்ந்து, கண்ணியமான வேலை செய்து, திருமணம் செய்து, குழந்தை குட்டிகளுடன் குதூகலமாகக் குடும்பம் நடத்துவதாகச் சமுதாயத்தில் கனவு காணவேண்டிய தாய், மகன் கள்ளனாக மாறிவிட்டதாகச் சமுதாயத்தில் ஏன் கனவு காணவேண்டும்? இத்தகைய கனவு காணும் தாய்மார்களைக் கொண்டதாகச் சமுதாயம் இருக்கலாமா? இத்தகைய கனவே சமுதாயத்தில் இருக்கக்கூடாதே? இத்தகைய கனவைக் காணும் சமுதாயமே இருக்கக் கூடாதே?

மகளுக்கு நல்ல இடத்தில் மண முடித்துப், பேரன் பேத்திகளைப் பெற்று மகிழ்வதாகக் கனவு காண வேண்டிய தந்தை மகள் விலைமகள் ஆகிவிட்டதாகச் சமுதாயத்தில் ஏன் கனவு காணவேண்டும்? இத்தகைய கனவு காணும் தந்தைமார்களைக் கொண்டதாகச் சமுதாயம் இருக்கலாமா? இத்தகைய கனவே சமுதாயத்தில் இருக்கக் கூடாதே? இத்தகைய கனவைக் காணும் சமுதாயமே இருக்கக்கூடாதே?

இந்தக் கனவுகளுக்குக் காரணமாக இருப்பது இன்றைய சமுதாயத்தின் நிலைமையே. வறுமையால்—வேலையில்லாத் திண்டாட்டத்தால் வாலிபர்கள் களவு செய்யவேண்டிய நிலைமை; பெண்கள் பரத்தையர்கள் ஆகவேண்டிய நிலைமை. எத்தனை ஆண்களைத் திருடர்களாக மாற்றி இருக்கின்றது இன்றைய சமுதாயத்தின் நிலை? எத்தனை பெண்களை விலைமகளிர்களாக மாற்றிவிட்டது இன்றைய சமுதாயத்தின் நிலை? எண்ண முடியாது! எழுத முடியாது!

தினமும் கண்ணன் தன் தாய்க்குப் பத்திரிகைபடித்துக்காட்டுவான் அல்லவா? வறுமையால் திருடியவர்களைப் பற்றிய செய்திகளை—வேலையில்லாத் திண்டாட்டத்தால் திருடிய வர்களைப் பற்றிய செய்திகளைத் தினமும் கேள்விப்பட்டிருக்கின்றாள் அல்லவா அந்தக் கிழவி? அதனால் எங்கே கண்ணனும் வேலையில்லாத காரணத்தால், தாயைக்காப்பாற்றக் கள்ளனாக மாறிவிடுவானோ என்ற மனப்போராட்டம் அந்தக் கிழவிக்கு. இன்றைய சமுதாய நிலைமைப்படி கண்ணன்திருடனாகிவிடுவான் என்ற நினைப்புக் கிழவிக்கு. அந்த நினைவின் பலனே இந்தக் கனவு; கண்ணன் கள்ளனாகக் காட்சியளித்த கனவு. பெற்ற தாயே பிள்ளை எங்கே திருடனாகிவிடுவானோ என்று நினைக்கும்படியாகக்—கனவு காணும்படியாக அல்லவா இன்றைய சமுதாய அமைப்பு இருக்கிறது? நினைவுதானே கனவு?

அதேபோல், தினமும் வஞ்சி தன் தந்தைக்குப் பத்திரிகை வாசித்துக் காட்டுவாள் அல்லவா? வறுமையால்—வேலையில்லாத் திண்டாட்டத்தால் பரத்தையர்கள் ஆகிவிட்ட பெண்களைப் பற்றிய செய்திகளைக் கேள்விப்பட்டிருக்கின்றார் அல்லவா அந்தக்கிழவர்? அதனால் கிழவருக்கு மனப்போராட்டம்; வஞ்சி நல்லவளாக வாழ்வாளா? மாட்டாளா? இன்றைய சமுதாய நிலைமைப்படி வஞ்சி விலைமகள் ஆகிவிடுவாள் என்ற நினைப்புக் கிழவருக்கு. அந்த நினைப்பின் பலனே இந்தக் கனவு. நினைவுதானே கனவு? வஞ்சி விலைமகள்ஆகிவிடுவாள் என்ற நினைவே கனவு ஆகிவிட்டது. பெற்ற தந்தையே மகள் எங்கே விலைமகள் ஆகிவிடுவாளோ என்று நினைக்கும்படியாகக்—கனவு காணும்படியாக அல்லவா இன்றைய சமுதாய அமைப்பு இருக்கிறது?

தவிர, மக்கள் நல்லவர்களாக, நல்மாக வாழ உண்மையில் முடியாவிட்டாலும், மக்கள் திருடர்களாக, விலைமகளிராக வாழ்வதாகக் கனவு காணும்படியாக அல்லவா இன்றைய சமுதாயம் இருக்கிறது? மக்கள் நல்லவர்களாக நலமாக வாழ்வதாக இன்றைய சமுதாயத்தில்பெற்றோர்கள் கனவுகூடக்காண முடியவில்லையே? பெற்றோரின் கனவிலாவது இன்றைய சமுதாயத்தில் பிள்ளைகளுக்கு நல்வாழ்வு இருக்கக் கூடாதா? கனவிலும் பிள்ளைகள் திருடர்களாகவும் பரத்தையர்களாகவும் அல்லவோ காட்சியளிக்கின்றனர்!? கனவிலேயே இன்றைய சமுதாயம் இப்படி இருந்தால், உண்மையில் எப்படி இருக்கும்? நெஞ்சு பொறுக்குதில்லையே?

பெற்றோரின்கனவை நனவாக்கிக் கொண்டே வருகிறது இன்றைய சமுதாயம். வறுமையால்—வேலையில்லாத் திண்டாட்டத்தால் திருடர்களும் விலைமகளிரும் சமுதாயத்தில் உண்மையில் பெருகிவருகின்றனர். கனவும்நினைவும் ஒன்றே. கண்ணனால் என்ன? வஞ்சியானால் என்ன? பசிவந்திடப் பத்தும் பறந்து விடுமே? அந்தக் கிழவன்—கிழவி கனவு நனவாகி விடுமே?

★

6-ம் பக்கத் தொடர்ச்சி

தலைதூக்கிப் பார்க்கிறதா? விடமாட்டேன்! தனிப்போர் புரிந்தேனும் கடுங்கோனைக் கொல்லாது விடமாட்டேன்!

[வாளையுருவிக்கொண்டு ஆவேசமாக ஓடுகிறான். வாளேந்திய வண்ணம் எதிரே வருகிறாள் பூபாலி.]

பூபாலி:- தந்தையே! பலிக்காது உமது எண்ணம்! வீழ்ந்தது களப்பிர ஏகாதிபத்தியம்! வென்றது தமிழர் படை! வேந்தரானார் என் காதலர்!

கண்ட:- ஆ! என் மகளா நீ? எமனே! தொலைந்துபோ!

[கத்தியைப் பாய்ச்சுகிறான் மார்பில். "ஐயோ" என்று அலறி விழுகிறாள், பூபாலி. மடிகிறாள். ஓடிவருகிறான் கடுங்கோன். சேந்தன் வழுதி, சிவமாறன், ஐயனடியானும் வந்து சூழ்ந்துகொள்கின்றனர் தப்பிஓடப்பார்க்கிறான்கண்டகன்.]

கடுங்:- கொடுங்கோல் வரிப்புலியே! இனித் தப்பமுடியாது உன்னால்! இறுதியிலே ஒரு வாய்ப்பு! வீரத்தோடு சாக விரும்புகின்றாயா? வீசு உன் வாளை! உம்!

[வாளால் தாக்குகிறான் கடுங்கோன். தடுத்துப் போர் புரிகிறான் கண்டகன். சமாளிக்க முடியாமல் வெட்டுண்டு வீழ்ந்து மடிகிறான். பூபாலியின் பிணத்தின்முன் மண்டியிடுகிறான் கடுங்கோன்.]

சிவமா:- வீழ்ந்தான் பகைவன்! வென்றது அறப்போர்! இருநூற்றைம்பதாண்டுகளாக இந்நாட்டைக் கப்பியிருந்த காரிருள் இன்றோடு தொலைந்தது! குலைந்தது கொடுங்கோன்மை! வீழ்ச்சியுற்ற தமிழினம் எழுச்சியுற்றால் என்ன செய்யும் என்பதனை உலகுக்கு மெய்ப்பித்துவிட்டான் பாண்டியன் கடுங்கோன்!

(பாடுகிருன்)

வெற்றிக்கோர் செங்குட்டுவன்
விறுபுகழ் கேளீர்!
வில்லாண்மைப் போர் தனக்கு
ஓரிவள்ளல் தேரீர்!
பெற்றிட்ட விடுதலைக்கோர்
கடுங்கோனைக் காணீர்!
பேராண்மைத் தமிழ்மரபு வீழாது
வாழ்க நன்றே!

சேந்தன்:- (மகுடத்தை எடுத்து) ஐயனடியாள்! வென்ற வேளையே நல்ல வேளை! கடமைஇன்னதென் றறியாமல் பகைவனிடம் அடிமைப் பணிபுரிந்து களங்கப்பட்டவை என் கைகள்! இதோ, உனது மாசு மருவற்ற வீரக் கைகளாலேபாண்டிய மகுடத்தை இப்பொழுதே அதற்குரிய கடுங்கோன் தலையில் சூட்டுக! (பெற்றுக்கொள்கிருள்)

கடுங்:- அக்கா! ஆருயிர்க் காதல் மறத்தி பூபாலியின் முடிவு......

ஐயன:- களங்கமற்ற காதலை மெய்ப்பித்தது! இனி வருந்திப்பயனில்லை. இந்த மாபெரும் வெற்றிக்குத் துணைபுரிந்து மடிந்திட்ட மாதரசி, மங்காத மாணிக்கம் பூபாலிக்கு எனது முதல் மரியாதையும், வணக்கமும் உரித்தாகுக! (வணங்குகிருள்). தம்பி! "நெல்லும் உயிரன்றே நீரும்உயிரன்றே, மன்னன் உயிர்த்தே மலர் தலை உலகம்" என்று புலவர் வகுத்த பொதுநெறி காத்து, நாடு புரப்பாயாக!

கடுங்:- தமக்கையே! தங்கள் கட்டளையைச் சிரமேற்கொண்டு, குறள்நெறிப்படி குவலயம் ஆள்வேன்! இது உண்மை!

ஐயன:- மடிந்திட்ட பாண்டியப் பேரரசை எடுப்பித்த மாவீரன், குலைந்திட்ட தமிழ் மரபைப் புதுப்பித்த புவியரசன், மானம் போர்த்த தானைவேந்தன் பாண்டியன் கடுங்கோன் வாழ்க!

(முடி சூட்டுகிருள்)

எல்லா:- வாழ்க! வாழ்க!

ஐயன:- விடுதலைபெற்ற தமிழகம் வாழ்க!

எல்லா:- வாழ்க! வாழ்க!

[எல்லோரும் ஒலிமுழக்கம் செய்கின்றனர்.]

முற்றும்.

★

வேர்க் கோட் பலா

[நா. நாராயணன்]

கண்டான்; கண்டாள்.

காதலித்தான்; காதலித்தாள்.

கா நடுவில், கானகத்தில், மலை முகட்டில், மலர்க்காட்டில் அவர்கள் காதல் மலர்ந்தது, வளர்ந்தது, கனிந்தது.

மணமுடிக்க வேண்டினுள் அவள்; மனம் ஒன்றுபட்டபின் மணத்திற்கென்ன அவசரம் என எண்ணினுன் அவன்.

காலம் ஊர்ந்தது; கன்னி வளர்ந்தாள்.

பெண்ணைப் பெற்றவர்கள் துடித்தனர் திருமணம் முடிக்க.

'காய்த்த மரமீது கல்லேறு செல்லுதல்' இயல்புதானே?

கனி கனிந்தபின் அடையவிரும்பியோர் தொகையும் பெருகிற்று.

இங்கிலையில் ஒரு நாள்,

தோழி தூது செல்கிருள்; நிலைமையை விளக்குகிருள்.

"என் தலைவியின் காதல்! வேர்க்கோட் பலா செறிந்த மலைநாடன் நீ. எனவே, இயல்பாகவே பாதுகாப்புஉள்ளதும், வேரில் பழுப்பதால் நிலம் அதனைத் தாங்குமாறு அமையப் பெற்றிருப்பதுமான பலாப் பழத்தையே நீ அறிந்திருப்பாய்! இன்னெரு பலா உண்டு. கொம்பிலே காய்கின்ற பலா. பாதுகாப்பு இல்லை. அதனைத் தாங்கும் கொம்போ சிறிது; பழமும் கனிந்துவிடுகிறது."

"இங்கிலையில் என்ன நடக்கும்? ஒன்று பழம் தானகவே கொம்பினின்றும் விழுந்துவிடும்; அல்லது பிறரால் அது கொள்ளப்படும். இதனை நீ அறிந்திருக்க முடியாது."

"ஏ! தலைவனே! இங்நிலைதான் இன்று, உன் உள்ளங் கவர்ந்தவளான, என் தலைவியின் நிலையும்."

"அவள் உயிர் மிகச் சிறிது. உன்பால் கொண்ட காமமோ மிகப் பெரிது."

"பருவத்தின் எல்லையிலே நிற்கும் தலைவி ஓர் முற்றிக் கனிந்த நற்கனி. கனிந்த பழத்தினைப் பிறர் கவரவும் ஏதுவாக இருத்தல்போலப் பருவம் வந்த தலைவியைப் பிறர் கொள்ளவும் உடைத்து."

இங்கிலையில் என்ன நடக்கும்?

"கனி பழுத்துவிட்டது; காலமும் உனக்குத் துணையாயிருக்கிறது. உடன் நீ அவளை மணமுடிக்க வேண்டும்"

"இல்லையேல் அவளை அடைய ஆவலாயிருக்கும் பலரில் ஒருவனுக்கு அவளை உடைமையாக்குவர் அவள் பெற்றோர்."

"விரும்பா இம் மணவினைக்கு அவள் ஒருப்படுவாளா? ஒருக்காலும் மாட்டாள். அப்பொழுது மூன்ருவது செயல்தான் நடக்கும்."

"கனிந்த பழம் காம்பினின்றும் விழுவதுதானே இயல்பு. காதலில் தோல்வியுற்றவர்கள் சாவைத் தழுவுதல்தானே உலக மரபு?"

"ஆம்! அதுதான் நடக்கும்? உன் காதலியாகிய என் தலைவியும் தன் உயிரைப் போக்கிக்கொள்வாள். நீயின்றி வாழ அவள் கற்கவில்லை. உன்பால் அவள் கொண்ட உயிர்க்காதல் உன்னவளை உனக்கில்லாது செய்துவிடும்."

"உன்னல் ஒரு துன்ப இலக்கியம் பிறக்க விரும்புகிருயா?" என்று மிக அழகாகவும், அதே சமயத்தில் ஆண்களுக்கு ஒரு பாடமாகவும் பேசுகிருள் தோழி.

'வேரல் வேலி வேர்கோட் பலாவின்
சாரல்நாட! சவ்விரை யாகுமதி
யாரஃ தறிந்திசினேரே! சாரல்
சிறுகோட்டுப் பெரும்பழந்தூங்கி யாங்கிவள்
உயிர் தவச்சிறிது, காமமோ பெரிதே.'

—குறுந்தொகை-18

தோழி கூற்ருக இப்பாடலை எழுதிய கபிலர் ஒரு நல்ல காதல் இலக்கியத்தை நமக்குத் தந்துள்ளார் என்று பெருமை கொள்வதில் தப்பில்லையல்லவா!

★



இலட்சியம்

[ப. இளவழகன்]

கொள்கை, நோக்கம், குறிக்கோள், எண்ணம் என்பதெல்லாம் "இலட்சியம்" என்பதின் மறுபதிப்பே.

இலட்சியம்—இவர்க்குத்தான் தேவை என்பதில்லை. எவர்க்கும் தேவையானது.

இலட்சியமில்லாத மனிதன் அடிக்கல் இல்லாத கட்டிடம். நீரில்லாக் கேணி; சாறில்லாக் கனி, தெளிவற்ற பால்; கருத்தில்லா நூல்.

ஒருவன் தான் கொண்டிருப்பதெல்லாம் இலட்சியமென்றும், கொள்ளாததெல்லாம் இலட்சியமல்லவென்றும் கூறுதல் அறியாமை.

"நான்"—என்பவனைவிட "நாம்" என்பவனிடம் உயர்ந்த இலட்சியங்கள் இருக்கும்.

எது இலட்சியம்?

போற்றுதலை எதிர்பார்க்காது, தூற்றுதலுக்கும் அஞ்சாது, வரவை எண்ணாது, இழப்பையும் பொருட்படுத்தாதவனுடையதுதான் இலட்சியம்.

மொழிக்காக — இனத்திற்காக— நாட்டிற்காகப் போராடுபவனுடைய இலட்சியமே தேவையானது. வரவேற்கப்படவேண்டியது.

தனக்காக வாழ்பவனுடைய இலட்சியத்தைக் காட்டிலும், தரணிக்காக வாழ்பவனுடைய இலட்சியம்தான் உயர்ந்தது. நிலைக்கக்கூடியது.

இலட்சியத்திற்காக இன்னுயிரை ஈந்தவர்கள் பலர். இலட்சியத்தின் வெற்றியால் மகிழ்வுடன் வாழ்கின்றவர்கள் பலர்.

பலரைச் சாகடிப்பதும், பலரை வாழ்விப்பதும் இலட்சியத்தினுடைய தன்மைகள்.

வள்ளுவர், புத்தர், இயேசு, நபி, சாக்ரடீஸ், செர்வெட்டஸ், அண்ணல்காந்தி, ஆப்ரகாம்லிங்கன் -இவர்களுடைய இலட்சியங்கள் மனிதர்களை வாழ்விப்பதற்காகத் தோன்றியவை. இவர்களுடைய இலட்சியங்களை மனித சமுதாயம் என்று முழுமையாக ஏற்று நடக்கின்றதோ அன்றுதான் வையகத்திலே வளம் கொழிக்கும்; அன்பு மிளிரும்; அமைதி நிலவும்.

பழைமையின்பாதுகாவலர்களால் வெறுக்கப்பட்டு, கல்லால் அடிபட்டு சிறைக்கம்பிகளுக்குள்ளே வதைபட்ட கலிலியோ, 'நல்ல இலட்சியங்கள் துவக்கத்தில் அலட்சியத்திற்கும், வெறுப்புக்கும் ஆட்படுவதுண்டு' எனும் கூற்றுக்கு சான்றல்லவா!

புகழுக்காக — பொருளுக்காக— பொழுதுபோக்குக்காகவுமன்றி, உள்ளதது உணர்வுகளைத் தன் செயல்களின் மூலம் அள்ளித் தெளிப்பவனே இலட்சிய எழுத்தாளனாக, ஓவியனாக, கலைஞனாக, கவிஞனாக, மதிக்கத் தகுதியுடையவன்.

ஒரு சாரார், இலட்சியத்தின் வெற்றிக்குத் துணையாகக், கடமை, நேர்மை, அன்பு, அறவழி ஆகியவைகளைக்கொள்வர். மற்றொரு சாரார், கொடுமை, அதிகாரம், வன்முறை ஆகியவைகளைக்கொள்வர்.

முதல் வழியே—அறவழியே நன்றென்பர் மூத்தோர்.

அன்பினால் ஆளவேண்டுமென்பது அறவழியோரின் இலட்சியமாகவும், அணுகுண்டினால் ஆளவேண்டுமென்பது வல்லரசுகளின் வரட்டு இலட்சியமாகவும் இருக்கின்றது.

அலைகடல் ஆர்ப்பரிப்பதும்; எரிமலை குமுறுவதும், காற்றுச் சுழன்றடிப்பதும், கார்மேகம் கடுமழையைப் பொழிவதும், கொடும் வேங்கை பாய்வதும், கோட்டான் அலறுவதும் இலட்சியத்தால்அல்ல; அவை அவற்றின் தன்மைகள். அதேபோல், அடக்கியாள நினைப்பதும் ஆதிக்க வெறிபிடித்தவர்களின் இலட்சியமல்ல; தன்மை.

வெறியிலே இலட்சியம் பிறப்பதில்லை—பிறக்காது. விவேகத்திலேதான் இலட்சியம் பிறக்கின்றது—பிறக்கும்.

அறியாமைவாதிகளின் இலட்சியம் வேறு. அறிவியல் துறையினரின் இலட்சியமே வேறு.

பஞ்சாங்கம் பார்ப்பவர்களின் இலட்சியம் வேறு. பகுத்தறிவுவாதிகளின் இலட்சியமே வேறு.

இலட்சியத்தை இலட்சமாக்கும் துரோகிகள் வேறு. இலட்சத்தை இலட்சியமாக்கும் தூயோர்களே வேறு.

பாரசீகத்து மண்ணைமிதித்து' பாபிலோனியாவிலே பவனிவந்து, நைல்நதிக்கரையிலே உலவி, சீலம் நதிவரைக்கும் தன்னுடைய முப்பதாவது வயதிற்குள்ளாகவே பயணம் முடித்துவிட்ட மாவீரன் அலெக்சாண்டர் அப்போதும் தன்னுடைய இலட்சியத்தின் வெற்றியால் முழு நிறைவுகொள்ளவில்லையாம்.

அகில ஐரோப்பாவையே கிடுகிடுக்க வைத்த வாள்வீரன் நெப்போலியன், தன்னுடைய இலட்சியத்தின் பாதி வெற்றியை மட்டுமே கண்டிருப்பதாகக் கூறினானாம்.

காதலுலகின் தலைமன்னனாய் விளங்கிய ஷாஜகான், இருபதாண்டுகள் செலவழிதது எழுப்பிய தாஜ் மகாலைக் கண்ட பின்பாவது தன்னுடைய இலட்சியம் நிறைவேறியதென்று மகிழ்ந்திருக்கக் கூடுமோ?

இவர்களுடைய இலட்சியமெல்லாம் ஒவ்வொருவகை. நம்முடைய இலட்சியமோ நாட்டிற்கானது.

இலட்சியமே! நீ எங்களை விட்டு விடாதே; நாங்களும் உன்னை விடமாட்டோம்!!

★

"பம்பாய் பரதேசி"

இருளெனும் இயற்கையன்னை, 'நாம் இனிமேல் இருத்தலாகாது' என்றெண்ணி மெல்ல, மெல்ல தன்னுடலை மறைத்துக் கொண்டிருந்தாள். அவள் ஏன் மறைகிறாள் தெரியுமா? இளம்பரிதி கீழ்வானில் எழுந்துவிட்டான். இனி நாம் இருந்தால், அவன் பொன்னிறக் கதிரொளியால் நம்மைப் பொசுக்கிவிடுவான் என்றெண்ணி அஞ்சித்தான் அவள் மறைந்தாள்! இருள் சென்ற பின் ஒளியது சிதற வானில் உயர்ந்தான் செங்கதிரோன்.

அந்நேரம்—!

பாண்டியன் சென்ற புகைவண்டி 'பம்பாய்' இரயில் நிலையத்தை அடைந்து நின்றது. நின்ற வண்டியிலிருந்து இறங்கிய பாண்டியன், நிலையத்திலிருந்து வெளியே வந்தான். எண்ணற்ற எண்ணங்கள் அவன் முன்னே வந்து நின்றன. எப்படியோ தேற்றிக்கொண்டு நடந்தான்.

சாலையின் இருமருங்கிலும் வானோங்கி வளர்ந்து நிற்கும் கட்டிடங்களையும், வரிசை, வரிசையாய் அணி செய்யும் அங்காடிகளையும் கண்டு பெருமூச்செறிந்தவனாய், ஒருசில கல் தொலைவு கடந்து சென்ற பாண்டியன், 'தாராவிக்குச் செல்லும் வழி' என்ற கைகாட்டி, காட்டிய வழியில் சென்றான். தாராவியை அடைந்தான்.

புத்தொளி பெற்றவனாய், புதுப் பொலிவு கண்டவனாய், பூரிப்புடன் தன் தாய் தந்தையரைத் தேட ஆரம்பித்தான். ஆம்! 'மும்மலையும், முந்நாடும், முந்நதியும், முப்பதியும், மும்முரசும், முத்தமிழும், முக்கொடியும்' என சீத்தலைச்சாத்தனார் சிறப்பித்த தென்னாட்டிலே பிறந்தவன் தான் பாண்டியன். இத்துணைச் சீரோடும், சிறப்போடும் செழித்தோங்கி வாழ்ந்த தென்னாடு, இன்று சீரற்றுச் சிறப்பிழந்து சீர்குலைந்து காணப்பட்டதால், வாழ வகையின்றி எத்தனையோ குடும்பங்கள் கடல் கடந்து சென்றிருக்கின்றன.

ஆனால்...!

பாண்டியன் தாய் தந்தை இருவரும் தாம் ஈன்ற அருஞ் செல்வமான பாண்டியனைத் தென்னாட்டில் அவன் மாமன் வீட்டில்விட்டுவிட்டுத் பிழைப்புத் தேடி வடநாட்டிலுள்ள பம்பாய் நகரத்தின் ஒரு பகுதியான 'தாராவி'க்கு வந்தனர்.

பெ. கலையரசன்

தென்னாட்டில் தலைசிறந்த நகரங்களுள் ஒன்றான மதுரையில் அவன் மாமன் வீட்டிலிருந்த பாண்டியனுக்கு ஓர்நாள் ஒரு மடல் வந்தது. தந்தையின் உடல்நிலை, கவலைக்கிடமாக இருக்கிறதென்று. அறிந்த பாண்டியன பம்பாய் புறப்பட்டான் தந்தையைக் காண! கண்டான். அவன் தந்தையை அல்ல! தாயை!! ஆம்! பொட்டிழந்து, பூவிழந்து, பொலிவிழந்து, புதுக்கோலம் பூண்டு கைம்பெண்ணாய்க் காட்சியளித்த தாயைக் கண்டான் பாண்டியன்.

"ஐயோ! அம்மா!" என்று அலறியவண்ணம் வீழ்ந்தான் வாயிற்படியில். பாண்டியன் வீழ்வதைக் கண்ட அவன் தாய் தூக்கியெடுத்து, முகத்தில் தண்ணீர் தெளித்துத் தேற்றினாள்! மெய்யுணர்வு பெற்றுக் கண்விழித்த பாண்டியன் "ஐயோ அம்மா! உங்களை இந்தக் கோலத்தில் காணவா ஓடோடிவந்தேன்? வெள்ளுடை உடுத்தி விதவையான காட்சியைக் காணவா விரைந்து வந்தேன்? என்னைப் பெற்று வளர்த்து, பெருமைக்கு ஆளாக்கிய என் தந்தையின்முகத்தைக் காணக் கொடுத்துவைக்காதவனாகிவிட்டேனே! ஐயோ அப்பா! நீங்கள் இறக்கும்தருவாயில் என்ன எண்ணியிருப்பீர்கள்? ஒரு மகன் இருக்கின்றான். அவனும் உயிர்போகும் நேரத்தில் இல்லையே என எண்ணியிருக்க மாட்டீர்களா? எண்ணியிருப்பீர்கள். கடிதம் கிடைத்தவுடன் காற்றாய்ப் பறந்துவந்தும் காண முடியவில்லையே உங்கள் முகத்தை! நான் என்ன செய்வேன்! பக்கத்திலா இருக்கிறது பம்பாய்?" என்று கதறினான் பாண்டியன்.

"அழாதே பாண்டியா! அழாதே! ஆண்டாண்டுதோறும் அழுது புரண்டாலும் மாண்டார் வருவரோ இம் மாநிலத்தில்! அழாதேயப்பா! நீ கொடுத்துவைத்தது அவ்வளவு தான்" என்று தேற்றினாள் பாண்டியன் தாய்.

"எப்படியம்மா இறந்தார் அப்பா?"

"எப்படிச் சொல்வேன் பாண்டியா? கொட்டும் மழையிலும், கொளுத்தும் வெயிலிலும், கொதிக்கும் தார் ரோட்டிலும் கைவண்டி இழுத்ததால் நெஞ்சுவலி ஏற்பட்டது. மருத்துவமனைக்கு அழைத்துச் சென்று காட்டினேன். பயனில்லை. இறுதியில் ஒருநாள் அந்த நெஞ்சுவலியே அவரைக் கொன்றுவிட்டது." என்றாள் தாய்.

தாய் கூறியதைக் கேட்ட பாண்டியன், "ஐயோஅம்மா! கைவண்டியா இழுத்தார் அப்பா? ஏ! தாழ்ந்த தென்னகமே! உன்னகத்தில்

பிறந்து வளர்ந்த ஒருவன் வஞ்சகர் வாழும் வடநாட்டிலா வண்டியிழுப்பது? வடநாட்டிலிருந்து தென்னாடு சென்று வட்டிக்கடை வைத்துத் தட்டிக் கொழுக்கிறான் வடவன்! ஆனால், தென்னாட்டிலிருந்து வடநாடு வந்தவன் வண்டியிழுத்தும், காலணிகள் துடைத்தும் வாழ்கிறான் இங்கே! இந்த நிலை மாறவே மாறாதா? என்போன்றார் மனம் மகிழாதா?'' எனத் தேம்பித் தேம்பி அழுதான் பாண்டியன்.

"மாறும் பாண்டியா! மாறும். நிச்சயம் மாறும்! ஒருநாள் மாறியே தீரும். ஏன் அழுகிறாய்? இனி அழுது என்ன செய்வது?'' என்று தேற்றினாள் பாண்டியன் தாய்.

மனிதன் அவன் கடமையைச் செய்ய மறந்தாலும் இயற்கை இடைவிடாது அதன் கடமையைச் செய்வதால் நாட்கள் சில நகர்ந்தன. அழையாது வருகைதரக் காத்திருக்கும் வறுமை என்னும் கொடுமை அடியெடுத்து வைதது விட்டது பாண்டியன் இல்லத்தில்! என்ன செய்வான் பாண்டியன்? எங்கெங்கோ அலைந்தான். வேலை கிடைக்கவில்லை! இறுதியில் தன் தந்தை விட்டுச் சென்ற பணியைத் தொடர்ந்தான் பாண்டியன். வண்டியும் உருண்டது. அவன் வாழ்க்கைச் சக்கரமும் உருள ஆரம்பித்தது.

ஒரு நாள்...!

கைவண்டி நிறையச் சுமையை ஏற்றிக்கொண்டு மாடுபோல் இழுத்துச் சென்றான் பாண்டியன். மகனுக்கு உதவியாகப் பின்னிருந்து தள்ளிக்கொண்டு வந்தாள் பாண்டியன் தாய். மாட்டுக்குப் பதிலாக மகன் வண்டியிழுக்கும் காட்சியைக் கண்ட தாய், மாலைமாலையாக உகுத்தாள் கண்ணீரை! என்ன செய்வாள் அவள்? அழுவதுதான் அவளிடம் எளிதில் கிடைக்கக்கூடியது. வேறு என்ன செய்யமுடியும் அவளால்!

பாண்டியன் தவழ்ந்து நடக்கும் காலததில் அவனைத் தூக்கி எடுத்து உச்சிமோந்து முத்தமிட்டு, "பாண்டியா! நீ பழங்காலப் பாண்டியர்களைப்போல் பசுமையாய் வாழ வேண்டும் என்று எண்ணித்தான் உனக்குப் பாண்டியன் என்றபெயர் வைத்தேன். நீ படித்துப் பட்டதாரியாகவேண்டும்; இந்தப் பாரே உன்னைப் புகழ்ந்து பேசவேண்டும். அதை நான் காணவேண்டும்.'' என்று கூறிய தாய் கைவண்டியை இழுக்கும் காட்சியைப் பார்த்துக் கண்ணீர் விடாமல் வேறு என்ன செய்வாள்? இதுபோன்று இன்னும் எத்தனை எத்தனை மனக்கோட்டைகள் கட்டினாளோ அத்தனை மனக்கோட்டைகளும் ஒரே நாள் மழையில் அழிந்துபோவதைக் கண்டு, அழாமல் வேறு என்ன செய்வாள்! 'அழுது என்ன செய்வது?' என்று தன்னைத்தானே தேற்றிக்கொண்டு விரைவாகத் தள்ளினாள் வண்டியை.

அந்நேரம்...!

பேரிரைச்சலுடன் விரைந்து வந்த பேருந்து வண்டி பாண்டியன் இழுத்து வந்த கைவண்டியில் பலமாக மோதியது. அவ்வளவுதான்! தூள் தூளாக நொறுங்கியது கைவண்டி. பக்கத்திலுள்ளோர் பாண்டியனைத் தூக்கியெடுத்து மருத்துவமனைக்கு எடுத்துச் சென்றனர். மருத்துவ சிகிச்சையால் மயக்கம் நீங்கி உணர்வு பெற்ற பாண்டியன். 'நாம் இங்கு ஏன வந்தோம்? யார் நம்மை இங்கு கொண்டுவந்தார்கள்? சாலையில் வண்டியல்லவா இழுத்து வந்தோம்! பின்னாலிருந்து வண்டியைத் தள்ளிவந்த அம்மா எங்கே?' என எண்ணியெண்ணிக் குமுறினான் பாண்டியன்.

அவ்வேளை!

கையில் மருந்துடன் காட்சியளித்தார் மருத்துவர். மருத்துவரைக் கண்ட பாண்டியன், "ஐயா! எப்படி ஐயா நான் இங்கு வந்தேன்? யாரய்யா என்னை இங்கு கொண்டு வந்தார்கள்?

"தம்பி! எனக்கு அதைப்பற்றி ஒன்றும் தெரியாது. அதோ வருகிறார்களே அவர்கள் இருவரும்தான் உன்னை இங்கு கொண்டுவந்தவர்கள்'' என்றார் மருத்துவர். அருகில் வந்து நின்ற இருவரையும் நோக்கிய பாண்டியன் "ஐயா! என்னய்யா நடந்தது? என் தாய் எங்கே? என்னை ஏன் இங்கு கொண்டுவந்தீர்கள்? கூறுங்கள் ஐயா! கூறுங்கள்!'' என்று கெஞ்சினான் பாண்டியன்.

உணர்ச்சியற்ற மரக்கட்டை போல் நின்ற இருவரும் "தம்பி! நீங்கள் வண்டியை இழுத்துவரும் போது, எதிரே வந்த ஒரு பேருந்து வண்டி உங்கள் கைவண்டியில் மோதியதால் வண்டி நொறுங்கியது. வண்டியை இழுத்துவந்த உங்களுக்கு காலில் பலத்த காயம் ஏற்பட்டதால் மருத்துவமனைக்குஎடுத்து வந்தோம்.'' என்றார்கள்.

"ஐயா! என் தாய் எங்கே? எங்கே இருக்கிறார்கள் என் தாய்?'' என்றான் பாண்டியன்.

"தம்பி! எப்படிச் சொல்வதென்றே எங்களுக்குப் புரியவில்லையே!''

"சொல்லுங்கள் ஐயா சும்மா சொல்லுங்கள்.''

"அடிபட்ட அதே இடத்தில் இறந்துவிட்டார்கள் தம்பி உன் தாய்'' என்று அவர்கள் கூறியதைக் கேட்ட பாண்டியன்,

"ஐயோ! அம்மா! நீங்களும் போய் விட்டீர்களா? என்னை ஆதரவற்ற அநாதையாய் விட்டுவிட்டு நீங்கள் இருவரும் சென்றுவிட்டீர்களே! இனி எப்படியம்மா வாழ்வேன்? யாரம்மா என்னைத் தேற்றுவார்கள்? பிறந்த நாட்டைத் துறந்தேன். பெற்ற தாயை இழந்தேன். பேணிய தந்தையைப் பறிகொடுத்தேன். இனி எப்படியம்மா வாழ்வேன்? உறுப்புகள் குறையாமல் இருப்போரே வாழ முடியாத இந்த நாட்டில், உறுப்புக்களில் ஒன்றான காலையிழந்த நான் எப்படியம்மா வாழப்போகிறேன்? ஐயோ! எண்ணும்போதே எனக்குப் பயமாக இருக்கிறதே! இன்னும் சின்னாட்களில் என்னை மருத்துவ மனையிலிருந்து வெளியே அனுப்பினால், எப்படி வாழ்வேன்? யார் என்னைக் காப்பாற்றுவார்கள்?'' என்று பைத்தியம் பிடித்தவன்போல் அலறிய பாண்டியன், ஒரு முடிவுக்கு வந்தவனாய், இடியெனச் சிரித்தவன், 'ஏ தென்னாடே! பார் உன் மகனின் நிலையை!! நீ வாழ்வளிக்காத காரணத்தால் வடநாடு ஓடிவந்து வதைபடுவதைப் பார்! வந்தவர்க்கெல்லாம் வாரி ஈந்த தென்னாடே! உன் வயிற்றில் பிறந்த நான் வடநாட்டில் பிச்சையெடுக்கப் போகிறேன்.

"ஆம்! பம்பாய் நகரத்தின் சாலை ஓரத்தில் அமர்ந்து, அம்மா தாயே ஐயா சாமி! ஐந்து காசு, பத்து காசு கொடுங்கள் என்று கேட்கப் போகிறேன். பார்த்தாயா என் நிலையை! பரதேசியாகிவிட்டேன். ஆம்! நான் ஒரு 'பம்பாய்ப் பரதேசி' என்று மருத்துவமனைப் படுக்கையிலிருந்த வாறே கத்தினான் பாண்டியன்.

*

2-ம் பக்கத் தொடர்ச்சி

ளுள். அதன் வழி செயல்புரிந்தாள். இது அவள் செய்த மற்ெருரு குற்றம்.

அல்ஜீரியா அல்ஜீரியருக்கே என்ற விடுதலைப்படை வரிசையாம் எப் எஸ்.என். இயக்கத்தின் தானைத் தலைவர்களில் இருவர் சை. முராத், சை. ஜமால் என்போர். அந்த வீரர் களின் அன்புத் தங்கையாகப் பிறந் தாள் ஜமிலா. இது அவள் செய்த மன்னிக்கமுடியாத குற்றம்.

இவற்ருேடுகூட,

நாட்டை யார் ஆண்டால் நமக் கென்ன என்று ஆளுகையிலிருப் போரை அண்டி, நத்திப்பிழைக்க, ஏற்றிப் போற்றிப் பிழைக்கத் தெரி யாதவளாய் இருந்தாள் அவள்.

பெரியன என்று எண்ணிப்பெற்று விட்ட இலட்சங்களை மறைக்க மொழிவழித் தேசியம் பேசவும்,— சிண்டு முடிந்து விடுவதன் மூலமும், மக்களிடையே பரபரப்பை உண் டாக்குவதன் மூலமும் மக்களைச் சுரண்டிக் கொழுக்கும் நாலாந்தர ஏடுகளின் கையைப் பிடித்துக் காலைப் பிடித்து அறிக்கைத் தலைவர் களாக உலவவும் தெரியாதவளாய் இருந்தாள் அவள்.

கலாசாரக் கடை பரப்பி ஒன்று ஆந்திரருக்கும், மற்ருென்று சீன ருக்கும் சொந்தமாகிப்போனதைக் குருட்டுமதி காரணமாக மறந்து போய் உரிமைக்கு வேங்கடம் உற வுக்கு இமயம் என்று கூச்சலிடவும், ஆற்ருமை, அறியாமை, பொருமை ஆகிய இவற்றையே ஆயுதங்களாக வைத்துக்கொண்டு, நாட்டு விடு தலைக்கு நாள்தோறும் பாடுபடும் நல்லோரை, சீரியோரை எள்ளவும், இகழவும், அவர்களைப்பற்றி வம்பு துன்புகள் பேசவும், பழுதையைத் தூக்கிப் போட்டுவிட்டுப் 'பாம்பைத் தூக்கிப்போட்டுவிட்டேன் பார் பார்! ஆள் இதோடு ஒழிந்தான் என்று வெற்றுக் கூச்சல் போடவும் தெரி யாதவளாய் இருந்தாள் அவள்.

இனிப் படியுங்கள் விடுதலைக்காக அந்த வீராங்கனை பட்ட துன்பக் காதையின் தொகுப்பை!

1960-ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 10-ம் நாள் இராப்பொழுது. அல்ஜீ ரியாவிலுள்ள பூபச்சா குடும்பத்தார் உறைந்து வந்த வீடு பிரெஞ்சு இரா ணுவப் படையினரால் சுற்றிவளைக் கப்பட்டது. அல்ஜீரியாவின் விடுதலை இயக்கம் எப். எல். என். அதன் போராட்ட வீரர்களில் இருவர் சை. மூராத், சை. ஜமால் எனப்படுவோர். அவர்கள் அந்த வீட்டுக்குள்ளிருப்ப தாகச் செய்தி;—உளவாளி தந்த செய்தி. எனவே அந்த வீடுசுற்றி வளைக்கப்பட்டது.

ஆனுல், அந்த வீரர்களிருவரும் அங்கு காணப்படவில்லை. அவர்கள் தவிர்ந்த ஏனைய பூபச்சா குடும்பத் தினர் அங்கு தூங்கிக்கொடிருந் தனர். துப்பாக்கிக் கட்டைகளால் அடிக்கப்பட்டு, பூட்ச் கால்களால் உதைக்கப்பட்டு அவர்களின் தூக் கம் கலைக்கப்பட்டது.

அப்துல் அசிஸ் பூபச்சா — 'அந் தக் குடும்பத்தின் தந்தை; 71-வய தடைந்த முதியவர். அவர் மனைவி சுபேதா—58-ஆண்டுகளைத் தாண்டி யவள். உடனுறைந்தோர் அவர் களின் புதல்வியர் இருவர்: ஜமிலா 22-வயதினள், நபிசா 20-வயதினள். மற்றும் நபிசாவின் கணவன். அவர் தம் குழந்தைகள். இவர்கள் தாம் அந்த வீட்டில் உறைவோர்.

அந்த வீடு சூறையாட்டத்திற்கு இலக்காகியது. அந்தச் சூறையாட் டத்தின் தலைவன் காப்டன் D. என் பான். அவன் ஜமிலாவுக்கும், அவள் தந்தைக்கும் முகமன் கூறினன். எப்படி? கையை மடக்கிக்கொண்டு முரட்டுத்தனமாக அந்த இருவரை யும் தாக்குவதன் மூலம்.

அந்த வீட்டில் விடுதலை இயக்கத் தோர் எனப் பெயர்பெற்ற இருவரின் கடிதங்கள் கைப்பற்றப்பட்டன. அந் தச் சோதனையை நடத்திய பட்டா ளத்தார் அந்த வீட்டில் அகப்பட்ட பணத்தையும், வேறு பயனுள்ள பொருள்களையும் கைப்பற்றிக் கொண்டார்கள். அவற்றைத் தமக் குள் பங்கிட்டுக் கொண்டார்கள். அதோடும் நிறைவு காணுதவர்கள் அந்த வீட்டிலுள்ள தட்டுமுட்டுச் சாமான்களையெல்லாம் உடைத்தார் கள், சிதைத்தார்கள், தூக்கியெறிந் தார்கள்.

பிறகு தந்தையும், மருமகனும், ஜமிலாவும் ஊர்தியில் ஏற்றப்பட் டனர். எல்பியார் என்னும் சிறைக் கூடத்திற்கு அழைத்துச் செல்லப் பட்டனர்.

அங்கேவிசாரணை தொடங்கியது. 'எங்கே முராத்? எங்கே ஜமால்?' இந்தக் கேள்விகள்தாம் திரும்பத் திரும்பக் கேட்கப்பட்டன. மின்கம்பிவதை.

ஜமிலா பதில் சொல்லவில்லை. குத்துகள் விழுந்தன அறைந்தார் கள் அவளை. குத்தும், அறைகளும் மழையெனப் பொழியப்பட்டன. அடிக்கொரு முறை ஜமிலாவின் தலை எதிரேயுள்ள சுவரில் மோதப் பட்டு, மோதப்பட்டு மீண்டது.

மூன்றுமணிநேரம் இது தொடர்ந் தது. பிறகு ஜமிலாவின் மைத் துனன் அங்கு கொண்டுவரப்பட் டான். அவனும் மூன்றுமணிநேரம் மின்சாரக் கம்பியால் சுடப்பட்டு, அதன் சித்திரவதைக்குள்ளாக்கப் பட்டு, அங்கே மீண்டுவந்திருந்தான். அவன் முகம் எங்கும் ஓரிடமும் எஞ் சுதல் இல்லாமல் ஆழமாகச் சூடு போடப்பட்டுச் செம்மைக் கோலம் பூண்டிருந்தது. அந்தக் கோரத்தை ஜமிலா காணவேண்டும் என்பதற் காகவே அவன் அங்கு கொண்டு வரப்பட்டிருந்தான்.

மேலும் கேள்விகள் கேட்கப் பட்டன.

"என் அல்ஜீரிய சகோதரர்கள்' அப்படித்தான் ஜமிலா தன் உடன் பிறந்தார் இருவரையும் அழைப்பது வழக்கம் — "வீட்டுக்கு வருவதை நான் கண்டுள்ளேன். ஆனுல் அவர் களின் வேறு விவரங்கள் எனக்குத் தெரியாது'' என்று ஜமிலா முடிவில் கூறினள்.

பின்னர் ஜமிலா நிலவறையொன் றுக்குள் இழுத்துச் செல்லப்பட் டாள். அந்த நிலவறையில் ஒரே கம்பி மட்டுமுள்ள சிறியதொரு பல கணி இருந்தது. அங்கே சிலமணி நேரம் அவள் அடைக்கப்பட்டுக் கிடந்தாள்.

மறுபடியும் காப்டன் D-யிடம் ஜமிலா அழைத்துச் செல்லப்பட் டாள். கேள்விகள் தொடர்ந்தன.

மறைவு

நமது நெருங்கிய நண்பரும் கழகத் தோழருமான சி. எஸ். பூஞ்சோலை அவர்களின் அன்னையார் திருமதி முனிரத்தினம்மாள் அவர்கள் தமது 55-வது வயதில் 1-5-62ல் இயற்கை எய்திய செய்தி கேட்டுப் பெரிதும் வருந்துகிறோம்.

தாயைப் பிரிந்து தாங்கொணுத் துயரத்துக்குள்ளாகியிருக்கும் நண்பர் பூஞ்சோலைக்கும் அவரது உறவினர் களுக்கும் நமது ஆறுதல் மொழிகளை உரித்தாக்குகிறோம். —ஆசிரியர்.

சுவரோடு அவள் ஒட்டி நிறுத்தப்பட்டிருந்தாள். ஒவ்வொரு கேள்வியின்போதும் அவள் பலமாகத் தாக்கப்பட்டாள். அது அவளிடம் கேட்கப்பட்ட கேள்விக்கு முத்தாய்ப்பாய் அமைந்தது.

மறுநாளும் காப்டன் D—கேள்விகள் கேட்டான்—காட்டுமிராண்டித் தனமான குறுக்குக் கேள்விகள்.

இடையில் ஜமிலா பெருமிதத்தோடு சொன்னாள் "நான் முராதுக்கும், ஜமாலுக்கும் மருத்துவ உதவிகள் புரிந்தேன்" என்று. அதற்கு வருத்தம் தெரிவிக்கவேண்டும் என்றான் காப்டன் D. மறுத்தாள் அவள். திரும்பவும் சோதனை மாரியெனக் குத்துக்கள் விழுந்தன.

அவ்வேளை விமானப்படைத் தலைவன் ஒருவன் ஆங்கிருந்தான். அவன் திடீரென்று ஜமிலாமீது பாய்ந்து கீழே தள்ளினன். தன்னுடைய கனமான பூட்சுக் காலால் ஜமிலாவின் வயிற்றருகில் பலமாக உதைத்து, மிதித்துத் துவைத்தான்.

திரும்பவும் அடைத்து வைக்கப்பட்டாள் ஜமிலா. அங்கே அவளை மருத்துவ உதவியாளன் ஒருவன் சோதனைசெய்தான். "இந்த அவகேடு நிறைந்த சித்திரவதை மேலும் தொடருமானால், ஜமிலா வெகுவிரைவில் சக்கை சக்கையாக்கப்பட்டு விடுவாள்" என்று அவன் சொன்னான்.

பிறகு ஜமிலாவின் தந்தை அங்கு கொண்டுவரப்பட்டார். அந்த முதியவரை அங்கிருந்த கொடியவர்கள் தண்ணீரில் முங்கி முங்கி எடுத்துப் பலவகை சித்திரவதைக்குள்ளாக்கினார்கள் கெஞ்சினார் அவர். காலைப் பற்றிக்கொண்டு வேண்டினார். "இரக்கங் காட்டுங்கள்!" என்றார்.

"இரக்கமா? உனக்கா? நாங்களா? காட்டுவதா?" என்று ஏளனம் பேசினர் அந்த வெறிபிடித்த பிரெஞ்சுப் படையினர். "நாங்கள் யாருக்குமே இரக்கங்காட்டுவதில்லை. அதிலும் அராபியரிடம் அந்தப் பேச்சுக்கே இடம் கிடையாது!" என்று அடித்துக் கூறினர் அந்த வெறியர். தங்கள் வதைபடலத்தை அவர்கள் தொடர்ந்தனர்.

தன் தந்தைக்காகக் கெஞ்சிக் கேட்க, மன்றாடி நிற்க ஜமிலா முயன்றாள். தன் அண்ணன்மார் இருவரும் தங்கள் வீட்டுக்கு வருவது பற்றித் தன் தந்தைக்கு எந்தச் செய்தியுமே தெரியாது என்று அவள் எடுத்துச் சொன்னாள். அவள் சொல்லுவது அங்கு செல்லுமா என்ன?

ஜமிலாவைப் பொறுத்தவரை ஜமிலா கேள்விகள் கேட்கப்படுவதும், அடித்துத் துவைத்து நொருக்கப்படுவதும் நாட்கணக்கில் நடந்து கொண்டேயிருந்தன.

ஜமிலாமீது சுமத்தப்பட்ட குற்றங்களில், குறித்த நேரத்தில் வெடிக்கும் வெடிகுண்டு ஒன்றை உணவு விடுதியொன்றில் வைத்ததாகச் சொல்லப்பட்டதும் ஒன்று. அதுவே முக்கியமானதுங்கூட.

ஜமிலாவை அடையாளங்காட்டவும், வெடிகுண்டு வைத்ததுபற்றிய சான்றுகள் கூறவும் பெண்ணொருத்தியும், ஆடவர் இருவரும் அழைத்து வரப்பட்டனர்.

"எங்களுக்கு நன்றாகத் தெரியும் வெடிகுண்டுவைத்தவள் யாரென்று. உணவு விடுதிக்குள் அவள் வந்தாள். உடனே போய்விட்டாள். எங்களுடன் அவள் உரையாடக்கூடச் செய்தாள்." என்று கூறிக்கொண்டிருந்தனர் அந்த மூவரும். ஆனால், ஜமிலாவை அவர்கள் நேரில் பார்த்ததும் கைவிரித்து விட்டார்கள்— "அவள் இல்லை இந்தப் பெண்" என்று கூறிவிட்டார்கள்.

குழந்தை முகம்

பெப்ருவரி 17ம் நாளன்று உசேன்டே என்னுமிடத்திலுள்ள காவல் முகாமுக்குக் காவல் தலைவர்கள் D—என்பானும், G—என்பானும் ஜமிலாவை அழைத்துச்சென்றனர். அங்கே அறையொன்றுக்குள் அவளை அடைத்துப்போட்டனர். அந்த அறைக்குள் ஒரு நாற்காலியிருந்தது. அந்த நாற்காலி பல் மருத்துவரின் நாற்காலியைப்போன்றிருந்தது. அழைத்து வந்த காவல் தலைவர்கள் இருவரோடு காவல் ஊழியன் ஒருவனும் சேர்ந்துகொண்டான். அவன் முகம் குழந்தையின் முகத்தைப்போன்ற அமைப்புடையது. மேலும் மூவர் அங்கு வந்தனர். அந்த மூவரும் நீலவண்ண உடை உடுத்திருந்தனர். அவர்கள் முன்பு F. L. N. இயக்கத்தைச் சேர்ந்திருந்தவர்கள். சிறை பிடிக்கப்பட்டுச், சித்திரவதைக்குள்ளாக்கப்பட்டு, வதை பொறுக்கமாட்டாமல் தங்கள் தோழர்களைப்பற்றி உளவுச் செய்திகள் கூறிவிட்டவர்கள்.

அவர்கள் எல்லாரும் சூழ்ந்து நிற்க ஜமிலாவிடம் கேள்விகள் கேட்கப்பட்டன. 'ஜமாலும், முராதும் எங்கே இருக்கிறார்கள்?' என்ற கேள்வியேதான் திரும்பத் திரும்பக் கேட்கப்பட்டது. "தெரியாது, தெரியாது!" என்று ஜமிலாவும் சளைக்காமல் பதில் சொல்லிக்கொண்டே வந்தாள். உளவு கூறும் ஒருவன் அவள் உடைகளையெல்லாம் களைந்தெறிய வேண்டுமென்று உத்தரவிட்டான். ஜமிலா உடைகளைக் களைய மறுத்தாள். அந்தக் கொடியவன் அவள் உடலை மூடிக்கொண்டிருந்த உடைகளைக் கிழித்துக் கிழித்து எறிந்தான்.

அங்கிருந்த நாற்காலிமீது ஜமிலா அமர்த்தப்பட்டாள். அவள் வாய் துணிப்பந்தால் அடைக்கப்பட்டது.

அங்கிருந்தவர்கள் அவளை வெறித்த பார்வையோடு பார்க்க மட்டுமா செய்தார்கள்? இழிந்த சொற்களைத் தமக்குள் பரிமாறிக் கொள்ளவும் செய்தார்கள். அவற்றோடு முடிந்ததா? அவர்கள் எல்லாருமாகச் சேர்ந்துகொண்டு, அவள் மீது திரும்பத் திரும்பக் காறித் காறித் துப்பிக்கொண்டேயிருந்தார்கள்.

பிறகு, உயிரைக் குடிக்காமல் உடலைமட்டும் வதைபடுத்தும் மின்சாரக் கம்பிகளை அவள் உடல் எங்கும் சுற்றிவிட்டார்கள். அந்தக் கம்பிகள் இயக்கிவிடப்பட்டன. அவள் உடலில் எங்கெங்கு முடியுமோ, அங்கெல்லாம் அந்தக் கம்பிகள் சுற்றிவிடப்பட்டிருந்தன. அப்போது காவல் தலைவன் ஒருவன் சிகரெட் பிடித்தான். அந்த சிகரெட் நெருப்பைக்கொண்டு ஜமிலாவின் மார்பிலும், தோளிலும் திரும்பத் திரும்பச் சுட்டுக்கொண்டேயிருந்தான். கடைசியில் நெருப்புக் கனிந்துகொண்டிருந்த அந்தச் சிகரெட்டை ஜமிலாவின் வலது தொடையில் வைத்து அழுத்தித் தேய்த்து, அணைத்தெறிந்தான்.

ஜமிலாவை முதலில் நான் சந்தித்தபோது இந்தச் சூடுபட்ட புண்களையெல்லாம் என் கண்களால் கண்டேன்.

மறுநாளும் வதைபடலம்தொடர்ந்தது. மூன்றாவது நாள், "செரால்டாவிலிருந்து பாரசூட் படையினர் வந்திருக்கிறார்கள். அவர்கள் உன்னை என்ன செய்யப்போகிறார்களோ தெரியவில்லை." என்று ஜமிலாவிடம் சொல்லப்பட்டது.

அன்றிரவு ஒன்பதுபேர் வந்தார்கள். அவர்கள் ஒருவர் மாற்றி ஒருவராகக் கையைய மடக்கிக் கொண்டு அவளைக் குத்தவும் அடிக்கவுமான நிகழ்ச்சியைத் தொடர்ந்து நடத்தினுர்கள்.

கடைசியாக அவள் அதுவரை பார்த்தே அறியாத அறை ஒன்றுக்குள் தூக்கிச் செல்லப்பட்டாள். அங்கே இரண்டே இரண்டு பொருள்கள் இருந்தன. மரத்தாலான மேசை ஒன்று, குளிக்கும் தொட்டி ஒன்று.

அந்தத் தொட்டி நிறைய நீர் இருந்தது. அந்தத் தொட்டிக்குக் குறுக்கே கம்பம் ஒன்று வைக்கப்பட்டது. ஜமிலா அந்தக் கம்பத்தின் மீது தொட்டியின் நீண்ட வாக்கில் கிடத்தப்பட்டாள்.

இப்போது அவர்கள் அந்தத் தொட்டியில் ஜமிலாவை வைத்துக் கொண்டு சிறுவர்கள் விளையாடும் ஏற்ற இறக்க விளையாட்டு விளையாடத் தொடங்கினுர்கள். எப்படி?

முதலில் அந்தப் பெண்ணின் தலை நீர்மட்டத்துக்குக் கீழே அமிழ்த்தப்படும். சட்டென்று ஒருவன் அவள் முழங்கால்மீது வந்து அமர்வான். இப்போது தலை நீர் மட்டத்துக்கு மேலே எழும். உடனே ஒருவன் ஓங்கி முகத்திலறைவான். மறுபடியும தண்ணீர்க்குள் அந்த முகம் போகும். மூச்சு முட்டும். இப்படி வதைத்துக்கொண்டே "ஜமாலும், முராதும் எங்கே?" என்று அவர்கள் கேள்வி போட்டார்கள்.

"நீ வெடிகுண்டு வைத்துப் பெண்களையும், குழந்தைகளையும் கொன்றுவிட்டாய்!" என்று அவர்கள் வேண்டுமென்றே — பொய்யுரை கூறினுர்கள்.

இப்போது ஜமிலா அந்தக் கொடியவர்கள் அடுக்கடுக்காகச் செய்த வதைகளின் வேதனையைத் தாங்கித் தாங்கி, மேலும் தாங்க முடியாத கடைசிக் கட்டத்தை வந்தடைந்திருந்தாள்;—தாங்குதலாகிய எல்லையைத் தாண்டிக் கொண்டு வந்து நின்றிருந்தாள்.

எனவே, அவள் ஏதோ உளறல் மொழி கூறுவதுபோல் 'ஆம், ஆம்' என்று அவர்கள் சாட்டிய ஒவ்வொரு குற்றச்சாட்டையும் ஒப்புக்கொள்ளத தொடங்கினுள். "அங்கு வெடிகுண்டு வைத்தது நான்தான். இங்கு வெடிகுண்டு வைத்தது நான்தான். எங்கெங்கும் வெடிகுண்டு வைத்ததெல்லாம் நான்தான்" என்றுள் அவள். மற்றவர்கள் செய்த தாகக்கண்டுபிடிக்கப்பட்டுக்குற்றஞ் சாட்டப்பட்டுத் தண்டனை பெற்றுவிட்ட குற்றங்களைக்கூட, அவள், தானே செய்ததாக ஒப்புக்கொண்டாள்.

ஜமிலாவின் இந்த உளறல்கள் அந்தப் பிரெஞ்சு விசாரணையாளர்களுக்கு, கயமையே உருவான அந்தக் கொடியவர்களுக்கு மேலும் கொதிப்பை உண்டாக்கின. அவர்கள் அவளை நிலத்தில் தூக்கி எறிந்து அறைந்தார்கள். இடுப்போடு சேர்த்துக் கைகளிரண்டையும் தோல்வார் ஒன்றுல் பிணித்தார்கள். கால்களை மட்டும் பிணிக்கவில்லை.

ஜமிலா இப்போது நினைவு தப்பிக் கொண்டிருந்தாள். கொடியவன் ஒருவன் அவளை நெருங்கி வந்தான். அது அவளுக்கு மங்கலாகத் தென்பட்டுக்கொண்டிருந்தது. அந்தக் கொடியவன் கையில் பீர் புட்டி ஒன்று வைத்துக்கொண்டிருந்தான்.

சில விநாடிகள்.

திடீரென்று ஜமிலா கதறினுள். பயங்கரமாகக் கூச்சல் கிளப்பிக் கதறினுள்.

இப்போது அவள் முற்றும் நினைவிழந்து போய்விட்டாள். தன் மேனியிலிருந்து கொப்பளித்துக் கிளம்பிய குருதி வெள்ளத்தில் அவள் மூழ்கடிக்கப்பட்டுக் கிடந்தாள்.

(இங்கே வதைப்படலத்தின் கடைசிக் கட்டமாக நடந்து முடிந்த கொடுமையினை எழுத்துருவாக்குவதற்கு முடியாத நிலையிலிருக்கிறோம்.)

திரும்பவும் ஜமிலா நினைவு பெற்ற போது இளம் மருத்துவன் ஒருவன கண்கலங்காமல் மாத்திரைகளைக் கொடுத்துக்கொண்டு இருந்தான். ஜமிலா அவற்றை உட்கொண்ட வண்ணமிருந்தாள்.

அந்தக் கொடுங்கோலரின் வதைபடலத் தலைவனுன காப்டன் D— என்பான் இப்போது தன் செயல் முறையை மாற்றிககொண்டு விட்டான். அவன் தயாரித்து வைத்திருந்த வாக்குமூலத்தில் அவளைக் கையெழுதது இட்டுவிடுமாறு ஒரு முறை கேட்டான். மற்றுமொரு முறை அவளைத் தங்கள் பக்கமே சேர்ந்துகொள்ளுமாறு கோரிக்கை விடுத்தான்.

விடுதியில் வைத்த வெடிகுண்டு

தன் அண்ணன்மார் இருவருக்குந் தான் துணைபுரிந்ததாக ஜமிலா திரும்பத்திரும்பக் கூறினுள். ஆனல் உணவு விடுதியில் வைக்கப்பட்டு—கடைசியில் அபாயமற்றது என்று கண்டுபிடிக்கப்பட்ட வெடி குண்டைத் தான் வைக்கவில்லை என்று அவள் மறுத்தாள்.

ஜமிலாவை 33 நாட்கள் காவலில் வைத்திருந்தனர் அல்ஜீரிய பிரெஞ்சு இராணுவத்தார். கடைசியில் போலீசார் தயாரித்த வாக்கு மூலத்தில் ஜமிலா கையெழுத்திடுவதாக ஒப்புக்கொண்டாள்.

1960 மார்ச் 15ம் நாள் அல்ஜீரிய நீதிமன்றத்திற்கு ஜமிலா அழைத்துச் செல்லப்பட்டாள். 'வழியில் யாருடனும் பேசுதல்கூடாது. எந்தச் செய்தியையும் வெளியிடக்கூடாது. அந்த நிபந்தனையைமீறினுல் மேலும் தொல்லைகள் சூழும்' என்று எச்சரிக்கை விடுககப்பட்டு, அவள் அழைத்துச் செல்லப்பட்டாள்.

மொன்சேர் பெராா்ட் என்னும் நீதித் தலைவர் அவளிடம் கேள்விகள் கேட்டார். போலிசாரின் வாக்குமூலத்தைப் படித்துக்காட்டினுர். ஜமிலா நொந்தாற்போல் தலையை ஆட்டினுள். அங்கே தட்டெழுத்துச் செய்யப்பட்டிருந்த வழக்குமன்றத்து வாக்குமூலத்தல் கையெழுத்திட அவள் சம்மதிததாள்.

'நீ சொல்லிக்கொள்வதற்கு வேறு ஏதாவது உண்டா?' — மொன்சேர் பெராா்டு வினவினுர்.

வெளியே காவல் ஊழியன் ஒருவன் எல்லாவற்றையும் ஒட்டுக் கேட்டுக்கொண்டு நின்றுன். இருந்தாலும் பரவாயில்லை. அவள் பேசித் தான் தீரவேண்டும். பேசினுள்.

"ஆம்" அவள் கூவினுள். நான் இராணுவத்தாரின் பெருவதைக் குள்ளானேன். விவரிக்கவொண்ணுத, வாயால் சொல்லமுடியாத, ஏட்டில் எழுதக்கூடாத துன்பங்களுக்கெல்லாம் இலக்கானேன். குறித்துக்கொள்ளுங்கள் எல்லாவற்றையும். மருத்துவர் ஒருவர் என்னைச் சோதிக்கவேண்டும். இது என் வேண்டுகோள். இதையும் குறித்துக்கொள்ளுங்கள்."

பதிவு எண். எம். 4642 தொலைபேசி எண்.... } அலுவலகம் 15 இல்லம் ...118

இலங்கையில் செய்திப் பத்திரிகையாகப் பதிவு செய்யப்பட்டது.

புனையாத் தொகுப்பு

மொன்சேர் பெரார்டின் நோக்கும் போக்கும் மாறவில்லை. அருகிலிருந்த எழுத்தர் பக்கம் திரும்பினார் "அவள் உண்மையே கூறுவதாக உறுதியெடுத்துக்கொண்டு வாக்கு மூலம் அளிப்பதாக எழுதிக்கொள்" என்றார்.

ஜமிலாவைப் பார்த்து அவர் சொன்னார்: "முதலில் கையெழுத்திட்டுவிடு. பிறகு நீ சொல்லுவந்ததை—மருத்துவரால் சோதிக்கப்படவேண்டும் என்பதைக் கீழே எழுதிவிடு. அப்புறம்......"

முடிக்காமல்முடித்தார் நீதிமன்றத் தலைவர்.

இவையெல்லாம் ஜமிலாவிற்கு நேர்ந்தவற்றின் புனையாத தொகுப்பு இவையெல்லாம உண்மை என்பதை பிரெஞ்சு ஆளும வர்க்கத்தின் வாயிலிருந்தே நான தெரிந்துகொண்டுவிட்டேன்.

நான் அல்ஜீரியாவிற்குப்போய்த் தகவல் சேகரிப்பதற்கு 48 மணி நேரம் மட்டுமே அனுமதிக்கப்பட்டது. இந்த நீதியற்ற போக்கைப் பிரெஞ்சு நாட்டு உயரிய அரசுத் துறையினரிடம் எடுத்துக்கூறி மறுப்புத் தெரிவித்தேன். அதன் மேல் பின்னும் ஒரு 24 மணி நேரம் அனுமதிக்கப்பட்டது.

முதன் முதலாகப்பார்பரூசே சிறைச்சாலையில்தான் நான் ஜமிலாவைக் கண்டேன. அடர்த்தியான கார் கூந்தலும், அமைதிக்கோலம் பூண்ட எழில் விழிகளும் உடையவள் ஜமிலா.

"உங்கள் சந்திப்பு மகிழ்ச்சியைத் தருகிறது" என்றாள் அவள் என்னைப்பார்த்து. அவளுடைய அமைதி தன்மைநிறைந்ததாகத்தான் தோன்றியது. என்றாலும், அங்கே பயங்கரமே குடிகொண்டிருக்கக் கண்டேன். சிகரெட் ஒன்றை அவளிடம் நீட்டினேன் நான். வேண்டாமென்று தலையசைத்தாள் அவள்.

"சிறை நிலைமை எப்படி இருக்கின்றது?" என்று நான் பேச்சைத் தொடங்கினேன். சட்டென்று அவள் நாற்காலியில் உட்கார்ந்துகொண்டாள். கால்மேல் கால் போட்டுக்கொண்டாள். அவள் கணுக்காலருகில் பெரியதொரு புண் ஆறிவரும நிலையிலிருப்பதைக் கண்டேன.

நிறைய நிறைய உறுதிவாய்ந்த குரலில், சினம்பொங்கிவரும் முறையில் அவள் பேசினாள்: "நான் எப். எல. என். என்னும் விடுதலை இயக்கத்திலோர் உறுப்பினள் என்பதை முதலில் நீங்கள் தெரிந்துகொள்ள வேண்டும். அல்ஜீரியாவின் விடுதலைக்காக மிகமிக மகிழ்ச்சியோடு நான சாகவும் சித்தமாயிருக்கிறேன் என்பதையும் தெரிந்துகொள்ளுங்கள்."

கேட்கவேண்டிய எல்லாக்கேள்விகளையும் கேட்பதற்கு அதுவே தக்க சமயம் என்று நான் எண்ணினேன்.

"அப்படியானால் நீங்கள் குற்றவாளி என்று ஒப்புக்கொள்கிறீர்கள்?"

"ஆமாம், நான் எல்லாவற்றையும் ஒப்புக் கொண்டு விட்டேன், எல்லாவற்றையும்!"

பிறகு அவள் வாயினின்று வெளிப்போந்த சொற்களின் வேகத்தை விவரிக்க முடியாது. அணையை உடைத்துக்கொண்டு வெளிப்படும் புனலின் வேகம் என்று அதனைச் சொல்வதா! பெண்புலியொன்றின் சீறல் என்றுதான் கூறுவதா?

தன் கதையைச் சற்றே கூறிவிட்டு நிறுத்தினாள் அவள். பிறகு திடீரென்று முகத்தைக் கைகளால் மூடிக்கொண்டு தன்னையறியாமல் தேம்பத் தொடங்கிவிட்டாள்.

"ஐயோ, பயங்கரம்! மிகமிகப் பயங்கரம்! பெண் மருத்துவர் ஒருவர் தான் என்னைச்சோதனையிடவேண்டுமென்று நான் கேட்டேன். அவர்கள் நடந்துகொண்ட கிராதக முறையினை, செய்துவிட்ட வெங்கொடுஞ் செயலினை ஆண்மகன் ஒருவனிடம் கூற முடியாது என்றாள்!"

நீண்ட பெருமூச்சொன்று விட்டுக்கொண்டாள் அவள். பிறகு என்ன நினைத்துக்கொண்டாளோ! நடந்தவற்றையெல்லாம் ஒன்றுவிடாமல் என்னிடம் மனம்விட்டுச் சொல்லலானாள்.

இரண்டுமணிநேரம் பிடித்தது அவள் எல்லாவற்றையும் சொல்லி முடிக்க. நான் வெட்கத்தால் குன்றிப்போனேன். கோபத்தால் குமுறிப்போனேன்.

இது பயங்கரம்! எண்ணும் எல்லையையும் தாண்டிவிட்ட பயங்கரம்! நான் இவற்றை நீதி மன்றத்தில் மட்டுந்தான் எடுத்துச் சொல்வேன் என்று எண்ணுதீர்கள். அங்குமட்டுந்தான் நீதிக்காக வாதாடுவேன், போராடுவேன் என்று எண்ணுதீர்கள்! பிரெஞ்சு தேசம் முழுவதுமே இந்த உண்மையை உணர்ந்துகொள்ளவேண்டும். வளைந்துவிட்ட செங்கோல் திரும்பவும் நிமிர்த்தப்படவேண்டும்!

சிறைப் பணிப் பெண் ஜமிலாவை அழைத்துப்போக வந்தாள். நான் ஜமிலாவைத் தழுவிக்கொண்டேன். "நாளை; அதிகாலையில் பத்திரங்களோடு வருவேன் — நீங்கள் கையெழுத்திடுவதற்கு" என்றேன் நான். அவளிடம் விடைபெற்றுக்கொண்டேன்.

தங்கும் விடுதியில் வைத்து எல்லாக் குறிப்புக்களையும் ஆராய்ந்தேன். ஜமிலாவின் கதையின இறுதிக் கட்டத்திற்கு வந்துவிட்டேன்.

இறுதிக் கட்டத்திற்கா? இல்லை, இல்லை. இப்போதுதான் போராட்டமே துவங்குகிறது!

இன்னும் சிலமணிநேரத்தில் நீதிமன்றத்திலிருப்பேன் நான். அங்கே நியாயத்தின் சார்பில் வாதாட எழுந்து நிற்பேன். பிரெஞ்சு இராணுவம் அல்ஜீரியாவில் நடத்திய அநியாய அலங்கோலங்களை எடுத்துச் சொல்வேன். இராணுவச் சட்டம் என்னும் உருக்காற்றலைச் சவாலுக்கழைத்துக்கொண்டு நிற்பேன்.

★

காஞ்சிபுரம், 86, திருக்கச்சிநம்பி தெரு, "திராவிட நாடு" அச்சகத்தில்
ஆசிரியர் (உரிமையாளர்) சி. என். அண்ணாதுரையால் அச்சிடப்பட்டு வெளியிடப்படுகிறது.